www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

செப்டம்பர் 2011
ரூ. 7. 00



## ராஜீவ் கொலை வழக்கு:

# தூக்குமேடையில் நிற்கிறது அரசியல் நியாயம்

படிப்பகம்

www.padippakam.com




நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, பாசிச பார்ப்பன ஜெயா கும்பலின் ஆணவத்துக்கு ஆப்பு வைத்து தமிழகத்தில் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துமாறு உச்ச நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. இந்த வெற்றி அவ்வளவு எளிதில் கிடைத்துவிட வில்லை. உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் வழக் குரைஞர்களின் வாதத் திறமையால் மட்டுமின்றி, புரட்சிகர அமைப்புகளின் தலைமையிலான மாணவர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் போராட்ட அலையின் காரணமாகவே உச்ச நீதிமன்றம் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

குறிப்பாக, உச்ச நீதிமன்றத்தில் இறுதிக்கட்ட விசாரணை நடந்த போது, பொதுக்கல்வித்திட்டத்தை முடக்க எத்தணிக்கும் பாசிச ஜெயா அரசுக்கு எதிராக சென்னை தாசப்பிரகாஷ் ஓட்டல் அருகே, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் 1.8.2011 அன்று மாண வர்களையும் பெற்றோரையும் திரட்டி போர்க்குணமிக்க மறியல் போராட்டத்தை பு.மா.இ.மு. நடத்தியது. போராட்டம் நடந்த இடத் திற்கு அருகிலுள்ள சந்தோஷ் நகர் பகுதியில் வீச்சாகப் பிரச்சாரம் செய்து மாணவர்களையும் பெற்றோரையும் பு.மா.இ.மு.வினர் போராட்டத்துக்கு அணிதிரட்டத் தொடங்கியதும், முதல் நாளிலி ருந்தே அந்நகரின் நுழைவாயிலில் போலீசைக் குவித்து அச்சுறுத் தியதோடு, யாரும் போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று பாசிச ஜெயா அரசு மிரட்டியது.

போலீசின் அச்சுறுத்தலைத் துச்சமாக மதித்து போராட்ட நாளன்று காலை 10.30 மணியளவில் அணிதிரண்ட பு.மா.இமு.வினர், ''போராட்டம் வேண்டாமா'' என்ற பாடலை மதில்சுவர் மீதேறி செங்கொடியுடன் பாட, அதை உழைக்கும் மக்களும் உற்சாகத்துடன் திரும்பப் பாடினர். பேரணியாக தோழர்கள் முழக்கமிட்டுக் கொண்டு நெடுஞ்சாலையை நோக்கி முன்னேறி, வட்டமாக அரண் அமைத்துக் கொண்டு தாசப் பிரகாஷ் ஓட்டல் அருகே சாலை மறியல் போராட்டத்தைத் தொடங்கினர். சந்தோஷ் நகரிலுள்ள மாணவர்கள்- இளைஞர்கள் மட்டுமின்றி, நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து பள்ளி- கல்லூரி மாணவர்கள் பேருந்துகளில் திரண்டு வந்து செங்கொடிகளுன் முழக்கமிட்டபடியே சாலை மறியல் போராட்டத்தில் இறங்கி னர். உடனே, போலீசு சுற்றிவளைத்து தடியடித் தாக்குதலை நடத் தி, மாணவர்களைப் பிடித்து இழுத்து அடித்து வாகனத்தில் ஏற்ற முற்பட்டதும், சந்தோஷ் நகரைச் சேர்ந்த பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை போலீசார் தாக்குவதைக் கண்டு திரண்டு வந்து போலீசாரைத் தடுத்ததோடு, அவர்களும் சேர்ந்து மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர். முன்னணியாளர்களான சிவப்புச் சட்டை அணிந்தவர்களைப் பிடித்து வாகனத்தில் ஏற்ற போலீசு முயற் சிக்கவும், பெற்றோர்கள் வாகனத்தை மறித்து முழக்கமிட்டனர். சில பெண்கள் போலீசின் சட்டையைப் பிடித்து ''எதுக்குடா அடிக்கிறே ?, புத்தகம் கேட்டா தப்பாடா?, உங்க அம்மாவ புத்த கம் கொடுக்கச் சொல்லுடா'' என்று எதிர்வாதம் செய்தனர். போலீசு தாக்கிய போதிலும் அவர்கள் சிதறி ஓடாமல், துணிவோடு போலீசை எதிர்த்து நின்றார்கள். சில பெற்றோர்கள் போலீசு மீது மண்ணைவாரித் தூற்றினர். இன்னும் சிலர் தோழர்கள் தாக்கப் படுவதைக் கண்டு விம்மியழுதார்கள். போக்குவரத்து முடங்கிப் போனதால் போலீசு திகைத்தது. மாணவர்கள் மட்டுமின்றி உழைக் கும் மக்களும் திரண்டு போராடுவதைக் கண்டு, வாகனங்களை நிறுத்திவிட்டு மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து இந்நியாயமான போராட்டத்தை ஆதரித்தனர். மாணவர்கள், இளைஞர்கள், பெற் றோர்கள், உழைக்கும் மக்கள்- என ஏறத்தாழ 600 பேரை அடித்து இழுத்துச் சென்று கைது செய்து மண்டபங்களில் அடைத்து வைத்த போலீசு, பின் னர் பு.மா.இ.மு.வின் 63 தோழர் கள் மீது பொய்வழக்கு சோடித்து சிறையில் அடைத்தது.



சென்னை மட்டு மின்றி, தமிழகத்தின் பல பகுதி களில் புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் மாண

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 11

செப்டம்பர் 2011

உள்நாடு

தனிஇதழ்: ரூ. 7.00

ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: ரூ.750.00



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


### லிபியா:

# அமெரிக்காவின் மறுகாலனியாகிறது!

கடந்த ஆறு மாதங்களாக லிபியாவில் அதிபர் கடாஃபிக்கு எதிராக நடத்தி வந்த போரில், ஏகாதிபத்திய விசுவாசகலகப்படை தலைநகர் திரிபோலியைக் கைப்பற்றியதும், அப்படையினரது இடைக்கட்ட அரசின் வெற்றியையும் கடாஃபி ஆட்சியின் வீழ்ச்சியையும் அமெரிக்காவும் நேடோ கூட்டணி நாடுகளும் அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளன. ஜனநாயகம், மனித உரிமை, போரில் சிக்கிய சிவிலியன்களைப் பாதுகாப்பது என்றெல்லாம் கூப்பாடு போடும் அமெரிக்காவின் கபடத்தனத்தை மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டிவிட்டது, லிபியா மீதான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போர்.

அமெரிக்க வல்லரசின் தலைமையிலான ஏகாதிபத்திய நேடோ கூட்டணி நாடுகள் இராக், ஆப்கான் போலின்றி, லிபியாவிலேயே விசுவாசக் கூலிப் படையை உருவாக்கிக் கொண்டு ஆக்கிரமிப்பு போரைத் தொடுத்தன. ஆளும் வர்க்க எதிர்த்தரப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அதிபர் கடாஃபிக்கு எதிரான அதிகாரப் போட்டியை மாபெரும் சர்வாதிகார எதிர்ப்பு - ஜனநாயகப் போராட்டமாகச் சித்தரித்து, அரபு நாடுகளின் துணையோடும் தமது கைக்கூலி ஐ.நா. மன்றத்தின் தீர்மானத்தைக் கொண்டும் லிபியாவில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்தி, அதன் மூலம் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடக் கிளம்பியுள்ளன.

அதிபர் கடாஃபியின் ஆட்சியில் லிபியாவின் எண்ணெய் வர்த்தகத்தில் ஏகாதிபத்தியப் பன்னாட்டுக் கம்பெனிகள் ஈடுபட்டிருந்தாலும், ஏகாதிபத்திய நிதிமூலதன ஆதிக்கத்தின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் லிபியா வராததும், எண்ணெய் வளங்கள் முழுமையாக ஏகாதிபத்தியக் கொள்ளைக்குத் திறந்துவிடப்படாததும்தான் அமெரிக்க மேலாதிக்கத்திற்கான இந்த ஆக்கிரமிப்புப் போரின் அடிப்படை. லிபியா மட்டுமின்றி, அங்கோலா, நைஜீரியாவில் எண்ணெய் மற்றும் கட்டுமானப் பணிகளில் பெருமளவு முதலீடு செய்துள்ள சீனா, இப்பிராந்தியத்தில் செல்வாக்கு செலுத்தி வளர்வது அமெரிக்க மேலாதிக்கத்துக்கு இடையூறாகும் என்பதால், வட ஆப்பிரிக்காவின் எண்ணெய் வளமிக்கப் பகுதிகளிலிருந்து சீனாவை வெளியேற்றுவது இப்போரின் முக்கிய நோக்கமாகியுள்ளது.

மேலும், சிரியாவில் மிகப்பெரிய விமானந்தாங்கி கப்பற்படைத் தளத்தை நிறுவியுள்ள ரஷ்ய வல்லரசு, சீனாவை ஆதரிப்பதால் மத்தியத்தரைக்கடல் பகுதியைத் தனது மேலாதிக்க இரும்புப் பிடிக்குள் கொண்டுவர, ரஷ்யா மற்றும் சீனாவின் செல்வாக்கை வீழ்த்துவது அமெரிக்காவுக்கு அவசியமாகியுள்ளது. எனவே லிபியாவைத் தொடர்ந்து, தனக்கு முழு விசுவாசமான அடிவருடி ஆட்சியைத் திணிக்க அடுத்ததாக சிரியா மீது அமெரிக்கா குறிவைத்துள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராக சிறு முணுமுணுப்பைக் காட்டினாலும் ஏழை நாடுகளின் ஆட்சிகளைக் கவிழ்த்து விசுவாச பொம்மையாட்சிகளை நிறுவுவது, மூலவளங்களைச் சூறையாடி மேலாதிக்கத்தை நிறுவுவது என்ற தனது மறுகாலனிய போர்த்தந்திரத் திட்டத்தை அமெரிக்கா வல்லரசு இந்த ஆக்கிரமிப்புப் போரின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

அமெரிக்காவுக்கு அனுசரணையாக நடந்து கொள்வதன் மூலம் தம்மீது அமெரிக்கா குறிவைக்காது என்று ஏழை நாடுகளின் ஆட்சியாளர்கள் இன்னமும் நம்பிக் கொண்டிருப்பது முட்டாள்தனம்; லிபியா மீதான ஆக்கிரமிப்பு அம்மணமாக நடந்த போதிலும் பெயரளவிலான கண்டனத்துடன் பக்கவாட்டில் விலகிக் கொள்ளும் சீனாவும் ரஷ்யாவும் இப்போது அமெரிக்காவை எதிர்த்து சவால் விடும் நிலையில் இல்லை; உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு போராடுவதன் மூலமே ஏகாதிபத்தியங்களையும், குறிப்பாக உலக மக்களின் கொடிய எதிரியான அமெரிக்க மேலாதிக்க வல்லரசையும் வீழ்த்த முடியும்; இந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்திவிட்டு மறுகாலனியப் புதைகுழியில் வீழ்ந்து கொண்டிருக்கிறது, லிபியா.



படிப்பகம்

www.padippakam.com

## ராஜீவ் கொலை வழக்கு:

# தூக்கு மேடையில் நிற்கிறது அரசியல் நியாயம்

**ஒரு அரசியல் கொலை வழக்கில், சந்தேகத்திற்கிடமான சிலரை விசாரிக்காமலிருக்கும்போதே ஏனையோரின் உயிரைப் பறிப்பது, அப்பட்டமான அநீதி.**

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரின் மரணதண்டனைநிறைவேற்றத்திற்கு 8 வாரங்கள் இடைக் காலத்தடை விதித்திருக்கிறது, சென்னை உயர் நீதிமன்றம். இம்மூவரின் சார்பில் ஆஜரான ராம் ஜெத்மலானி, காலின் கன்சால்வேஸ், வைகை ஆகிய வழக்குரைஞர்கள் கருணை மனுவின் மீது குடியரசுத் தலைவர் முடிவெடுப்பதில் நேர்ந்துள்ள 11 ஆண்டு காலத் தாமதத்தின் விளைவாக கைதிகள் மூவரும் அனுபவித்துவரும் துன்பம் மரணதண்டனையை விடக் கொடியது என்ற வாதத்தை முதன்மைப் படுத்தி, இம்மரணதண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியிருக்கின்றனர். மனுவை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்ற பெஞ்சு, 8 வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு மத்திய அரசைக் கோரியுள்ளதுடன், செப்டம்பர் 9 -ஆம் தேதியன்று நிறைவேற்றப்படவிருந்த தூக்கு தண்டனையை அதுவரை நிறுத்தி வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

தமிழக மக்களுடைய பொதுக்கருத்தின் திரண்ட உருவமாக, உயர்நீதிமன்ற வளாகத்தில் அலைமோதிக் கொண்டிருந்த மக்கள் வெள்ளம், தீர்ப்பினை அறிந்தவுடன் மகிழ்ச்சிப் பெருக்கில் கொப்பளித்தது. இது இறுதி வெற்றி அல்ல என்றபோதிலும், குறிப்பிடத்தக்க வெற்றி. தமிழுணர்வாளர்களும் பல்வேறு அமைப்பினரும் தமிழகம் முழுவதும் செய்த பரப்புரைக்கும் பரவலாக நடைபெற்ற போர்க்குணமிக்க போராட்டங்களுக்கும் கிடைத்த வெற்றி. மக்கள் மத்தியில் கருத்து ரீதியான ஆதரவை உருவாக்குவதில் வைகோ, சீமான் போன்றோர் ஆற்றிய பங்கும், கருமமே கண்ணாக இருந்து இவ்வழக்கினைக் கொண்டு சென்ற உயர்நீதிமன்ற வழக்குரைஞர் புகழேந்தி போன்றோரின் பாத்திரமும் குறிப்பிடத்தக்கவை.

ஏறத்தாழ உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வெளியான அதே நேரத்தில், மூவரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்குமாறு குடியரசுத் தலைவரைக் கோரும் தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றினார் முதல்வர் ஜெயலலிதா. அதனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தோரைக் காட்டிலும் அதிர்ச்சி அடைந்தோரே அதிகம். முந்தைய நாள் இதே பிரச்சினை பற்றி சட்டமன்றத்தில் பேசிய ஜெயலலிதா, குடியரசுத்தலைவர் நிராகரித்த கருணை மனுவை அங்கீகரிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு கிடையாது என்று கூறி, மத்திய உள்துறை அமைச்சகத்தின் கடிதம் ஒன்றையும் அதற்கு ஆதாரம் காட்டினார். மரண தண்டனையை ரத்து செய்வதற்கான அதிகாரமில்லை என்பதுடன் அதில் தனக்கு விருப்பமும் இல்லை என்பதை அவரது பேச்சு பளிச்சென்று காட்டியது. முதல்வரைச் சந்திப்பதற்கு பேரறிவாளனின் தாயார் மற்றும் வைகோ உள்ளிட்ட யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. வேலூர் சிறையின் தூக்கு மேடைக்கு பூசை போடப்படுவதையும் புதுப்பிக்கப்படுவதையும் வக்கிரப் பரவசத்துடன் வருணித்துக் கொண்டிருந்தது, தினமலர். ஜெயலலிதா கும்பலின் உறுப்பினர்களான பார்ப்பன பாசிஸ்டு சுப்பிரமணிய சாமி, சோ போன்றோர் நடைபெறவிருக்கும் நரகாசுரவதம் குறித்த தங்களது மறைக்கவொண்ணா மகிழ்ச்சியை தொலைக்காட்சிகளில் பகிர்ந்து கொண்டிருந்தனர். இந்நிலையில்தான் ஆகஸ்டு 30 -ஆம் தேதியன்று வெளிவந்தது ஜெயலலிதாவின் அந்தர்பல்டி அறிவிப்பு.

மரண தண்டனை விதிக்கப்பட்டு, 21 ஆண்டுகளாகக் கொடுஞ்சிறையில் வைத்து வதைக்கப்படும் பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன்.



மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்று முந்தின நாள் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையை மறுத்து முதல்வர் அலுவலகத்துக்கு கடிதம் எழுதிய பி.யு.சி.எல் அமைப்பின் மாநிலத் தலைவர் டாக்டர். சுரேஷ் இது தொடர்பான அரசியல் சட்டத்தின் நிலையை அக்கடிதத்தில் தெளிவுபடுத்தியிருந்தார்.

அரசியல் சட்டத்தின் பிரிவு 161 ஆளுநருக்கு வழங்கியிருக்கும் இறையாண்மைமிக்க அதிகாரத்



படிப்பகம்

www.padippakam.com

தையோ, இபிகோ பிரிவு 54 மற்றும் கு.ந.ச பிரிவு 433 மாநில அரசுக்கு வழங்கியிருக்கும் அதிகாரத்தையோ மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஒரு நிர்வாகரீதியான அறிவுறுத்து கடிதம் பறிக்கவோ, கட்டுப்படுத்தவோ இயலாது. மேலும், இந்திய ஒன்றியத்தின் மாநில மைய அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பிரிவினைகள் வரையறுக்கப்பட்டுள்ள துறைகளில், குடியரசுத்தலைவர் மேல் என்றும் ஆளுநர் கீழென்றும் (அதாவது மைய அரசு மேல், மாநில அரசு கீழ் என்று) கருதும் அதிகாரப் படிநிலை அணுகுமுறை பொருந்தாது என்பதே அரசியல் சட்டத்தின் நிலை. எனவே, குடியரசுத்தலைவர் நிராகரித்த மனுவை மீண்டும் குடியரசுத்தலைவர் தான் பரிசீலிக்க இயலும் என்ற கருத்து தவறு என்று அவரது கடிதம் விளக்குகிறது.

இவையெல்லாம் தமிழக அரசுக்கோ, ஜெயலலிதாவின் ஆலோசகர்களுக்கோ தெரியாததல்ல. சட்டப் பிரிவு 161 அம்மாவின் கருணைக்கரங்களைக் கட்டிப் போட்டிருப்பதனால் தான், தூக்கு தண்டனையை அம்மா ரத்து செய்யமுடியவில்லை என்று அ.தி.மு.க வைச் சேர்ந்த அடிமுட்டாளும் கூட நம்பமாட்டான். ஏனென்றால் கடந்த 20 ஆண்டுகளாக ஜெயலலிதா தமிழகத்தில் நடத்திவரும் அரசியலின் மையப்புள்ளியே புலி பீதியூட்டுவதுதான் . ராஜீவ் கொலைப் பழியை தி.மு.க.வின் மீது போட்டு, ராஜீவின் பிணத்தின் மீதேறித்தான் ஜெயலலிதா முதல்வர் நாற்காலியைக் கைப்பற்றினார். அன்று ஈழத்தமிழர்களுக்கும், ஈழ ஆதரவாளர்களுக்கும் எதிராக அவர் ஆடிய பேயாட்டத்தை யாரும் மறந்துவிடவில்லை. தடா, பொடா சட்டங்களை ஏவியதாக இருக்கட்டும், புலிகள் இயக்கத்தை வேரறுப்பதற்கு முனைந்து நின்றதாக இருக்கட்டும், தமிழ்ச்செல்வன் மரணத்துக்கு இரங்கல் கவிதை எழுதியதற்காக கருணாநிதியைக் சாடியதாக இருக்கட்டும் அனைத்திலும் ‘மாறாத கொள்கை உறுதி’யை பார்ப்பன பாசிச ஜெயலலிதா காட்டி வந்திருக்கிறார். ஒரு தாய் என்ற காரணத்தினால் நளினியின் மரண தண்டனையை அன்றைய தி.மு.க. அரசு ஆயுள்தண்டனையாக குறைத்தபோது, அதையும் எதிர்த்த இந்த அம்மையார்தான், ‘‘மூவரின் கருணை மனுவை நிராகரித்தவர் கருணாநிதி’’ என்ற உண்மையை இன்று உலகுக்கு அறிவித்து அவரது சந்தர்ப்பவாதத்தை சாடுகிறார்.

‘‘எதுவும் செய்யமுடியாது’’ என்று முந்தின நாள் கைவிரித்து விட்டு, மறுநாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும் அம்மாவின் அந்தர்பல்டிக்கு அடிப்படை என்ன? மனிதாபிமானமோ, தமிழுணர்வோ 24 மணி நேரத்துக்குள் முதல்வரிடம் ஊற்றெடுத்துப் பெருகி சட்டமன்றத்தில் பாய்ந்துவிடவில்லை. தமிழக மக்களின் மனநிலை குறித்த அவரது மதிப்பீடுதான் மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது. அதன் விளைவாக முடிவிலும் மாற்றம் வந்திருக்கிறது.

முதலாவதாக, இம்மரணதண்டனைக்கு எதிராக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்களில் அவதானிக்கத்தக்கதொரு போர்க்குணம் இருந்தது. அமைப்பு சார்ந்த போராட்டங்கள் மட்டுமின்றி, தன்னெழுச்சியாக நடைபெற்ற மாணவர்கள் - வழக்குரைஞர்களின் போராட்டங்களும் ஈழப்போரின் இறுதி நாட்களில் தமிழகம் இருந்த நிலையை நினைவூட்டின. சமச்சீர் கல்விக்கான போராட்டங்களுக்காக தெருவுக்கு வந்து பழகிய மாணவர்களும், ஈழம் மற்றும் உயர் நீதிமன்ற போலீசு தாக்குதல் தொடர்பான பிரச்சினைகளில் போர்க்குணமிக்க போராட்டங்களை நடத்தி

## தோழர் செங்கொடி மூட்டிய போராட்டத் தீ!




முத்துக்குமாரின் உடல் தமிழகத்தைத் தட்டியெழுப்பியதைப் போல, தன் உடலும் தூக்குதண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்று தமிழர்களின் உயிரைக் காப்பாற்றப் பயன்படட்டும் என்ற நம்பிக்கையுடன் கடிதம் எழுதி வைத்துவிட்டு, காஞ்சிபுரம் மக்கள் மன்றத்தில் இயங்கிவந்த 21 வயதான பழங்குடி இனத்தைச் சேர்ந்த இளம் பெண் தோழரான செங்கொடி, கடந்த ஆகஸ்ட் 28-ஆம் தேதி ஞாயிறன்று தனது உடலைத் தீக்கிரையாக்கிக் கொண்டு தியாகியாகியுள்ளார்.

அரசியலற்ற அமைதியிலும் விரக்தியிலும் நம்பிக்கையின்மையிலும் மூழ்கடிக்கப்பட்டுள்ள தமிழகத்தைத் தனது தீக்குளிப்பினால் இரு ஆண்டுகளுக்கு முன்னர் தட்டியெழுப்பினார், முத்துக்குமார். இன்றும் அதே நிலைமைதான் தொடர்கிறது. இன்னும் விழித்தெழாத தமிழகத்தின் அரசியலற்ற கோழைத்தனமும், கருணையை எதிர்பார்த்து நிற்கும் அவலமுமே அந்த இளம் பெண்ணின் உள்ளத்தை எரித்திருக்கிறது. மூவர் தூக்கை நிறுத்துமளவுக்கு நம்பிக்கையூட்டும் போராட்டங்களும் அரசியல் முழக்கங்களும் தமிழகத்தைப் பற்றியிருந்தால், செங்கொடி தீக்குளிக்க நேர்ந்திருக்காது.

சென்றுவாருங்கள், தோழர் செங்கொடி! உணர்ச்சி வேகத்தில் நீங்கள் தீக்குளித்திருந்தாலும், சரியான திசையில் போராடாத தமிழகத்தை நீங்கள் சாடியிருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொண்டுள்ள தோழர்கள், நீங்கள் எழுப்பியிருக்கும் கோரிக்கையை நிறைவேற்றப் போராடுவார்கள். உங்களின் தீக்குளிப்பு அந்தப் போராட்டத்தை நெருப்பாய் பற்ற வைக்கும். மூவர் தூக்கிற்குக் காரணமான பாசிச காங்கிரசு அரசு, பாசிச ஜெயா, அநீதியான நீதிமன்றங்கள் மீதான போராட்டத் தீயின் அனலால் தமிழகமே கொதிக்கும்!



படிப்பகம்

www.padippakam.com

யிருக்கும் வழக்குரைஞர்களும் தூக்கு தண்டனைக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்கக் கூடிய சாத்தியப்பாடு விளங்கிக் கொள்ள முடியாததல்ல.

*1991*-இல் ராஜீவின் உடலைக் கண்டு தமிழகம் அழுததும், அந்தக் கண்ணீரை ஓட்டுகளாக ஜெயலலிதா மாற்றிக் கொண்டதும் உண்மைதான். ஆனால், அது வேறு தமிழகம். இன்று, இன அழிப்புப் போரைத் தடுக்க முடியாமல் தோற்றது மட்டுமின்றி, போர்க்குற்றவாளி ராஜபக்சேவை தண்டிக்க முடியாமல் பாதுகாத்து நிற்கும் டெல்லியைக் கண்டு குமுறிக் கொண்டிருக்கிறது, ஒரு தலைமுறை. இந்த குமுறலின் மீது உப்புக்காகிதத்தைத் தேய்க்கும் விதமாக மூவரின் தண்டனையை நிறைவேற்ற முற்பட்டால், அது தோற்றுவிக்கும் காயமானது பார்ப்பனக் கும்பலையும் அவர்களது தேசியத்தையும் வெறுக்கின்ற புதியதொரு தலைமுறையை உருவாக்கக் கூடும் என்று உளவுத்துறை எச்சரிக்க, 'அபாயகரமான' அந்த சாத்தியப்பாட்டினைத் தடுப்பதற்கானதொரு உபாயமாகவும் அம்மா இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கக் கூடும்.



மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு, 21 ஆண்டுகளாகச் சிறை தண்டனை அனுபவித்து வரும் நளினி.

மூன்றாவதாகவும் ஒரு காரணம் இருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத்தடை கிடைத்துவிடும் என்பது ஓரளவு சட்டம் தெரிந்த அனைவரும் எதிர்பார்த்த விடயம். வேறொரு வழக்கில் கருணை மனுவின்மீது கருத்து கூறாமல் 2 ஆண்டுகள் தாமதித்ததையே காரணம் காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்திருக்கிறது உச்ச நீதிமன்றம். *11* ஆண்டுகள் என்பது எவ்விதத்திலும் நியாயப்படுத்த இயலாத தாமதம் என்பதால், இவ்வழக்கில் நீதிமன்றத்தில் நிவாரணம் கிடைப்பதற்கான சாத்தியம் அதிகம் என்றே சொல்லவேண்டும். இத்தகைய சூழலில், சட்டமன்றத்தின் மூலம் குடியரசுத் தலைவருக்கு விடப்படும் வேண்டுகோள் அரசியல் ரீதியில் தனக்கு உபயோகமானதாக இருக்கும் என்றும் ஜெயலலிதா கணக்கிட்டிருக்கக் கூடும்.

இக்காரணிகள் அனைத்தின் கூட்டல் கழித்தலில் வந்திருக்கக் கூடிய விடைகளில் ஒன்றுதான் ஜெயலலிதாவின் சட்டமன்றத் தீர்மானம். இது அமைச்சரவை முடிவல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆட்சிக்கு வந்த மறுகணமே உடுக்கை இழந்தவன் கைபோல மெட்ரிக் முதலாளிகளின் இடுக்கண் களைவதற்காக நீண்ட கரங்கள் அல்ல இவை. இது அரசியல் ஆதாயத்தை ஜேப்படி செய்வதற்காக நீண்டிருக்கும் கரம். அதிலும் கூட கொஞ்சம் வேண்டா வெறுப்பாகவே நீட்டப்பட்டிருக்கும் கரம். இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்குமாறு மத்திய அரசைக் கோருகின்ற தீர்மானத்தைப் போல, இது இன்னொரு தீர்மானம். அவ்வளவே.

உண்மை இவ்வாறிருக்க, ''இலங்கை அரசுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய ஜெயலலிதாவை இக்கட்டில் ஆழ்த்துவதற்காகத்தான் காங்கிரசு அரசு கருணை மனுவை நிராகரித்திருக்கிறது'' என்றொரு நகைக்கத்தக்க காரணத்தைக் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள், ரூம் போட்டு சிந்திக்கும் சில அறிஞர் பெருமக்கள். 'தமிழினத்தின் மானத்துக்கு மரணதண்டனை விதிக்காதீர்கள்' என்பதுதான் நாம் இவர்களிடம் பணிந்தளிக்கும் கருணை மனு.

குடியரசுத் தலைவருக்கு கருணை மனுவை நிராகரித்து கடிதம் அனுப்பியிருப்பது மத்திய உள்துறை அமைச்சகம். அதன் அமைச்சர் ப.சிதம்பரத்துக்கும் ஜெயலலிதாவுக்கும் ஓட்டுக்கட்சி அரசியல் களத்தில் முரண்பாடுகள் இருந்த போதிலும், ஈழப்போராட்டத்தை ஒடுக்குவதில் அவர்கள் கொள்கை ரீதியான ஒற்றுமை உடையவர்கள். தமக்கிடையிலான சில்லறை முரண்பாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, 'தேசியநலனுடன்' தொடர்புள்ள விடயங்களில் சேர்ந்தியங்கும் 'பக்குவம்' உடையவர்கள். மேலும், தமிழகத்தில் தனிப்பெரும்பான்மையுடன் அம்மாவின் ஆட்சி அமைந்திருக்கும் இந்தச் சூழல்தான் சுமுகமாகவும், சட்டம்- ஒழுங்குப் பிரச்சினைகள் ஏதும் இல்லா

ஆர்த்தெழுந்தது தமிழகம்:
மூவரின் தூக்கு தண்டனையை ரத்து செய்யக் கோரி, கோவை சட்டக் கல்லூரி மாணவர்கள் நடத்திய ரயில் மறியல் போராட்டம்.





படிப்பகம்

www.padippakam.com



மூவரின் தூக்கு தண்டனைக்கு இடைக்காலத் தடை விதித்த தீர்ப்பினை அறிந்தவுடன் மகிழ்ச்சிப் பெருக்கில் கொப்புளித்த மக்கள் வெள்ளம்.

மலும் தூக்கு தண்டனையை நிறைவேற்றத் தகுந்த சூழல் என்று மத்திய உளவுத்துறைகளும் மதிப்பிட்டிருக்கும். தமது மதிப்பீடு முற்றிலுமாய்ப் பொய்த்துவிடும் என்று உளவுத்துறையினர் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அவர்கள் மட்டுமா, ஆகஸ்டு30 - ஆம் தேதியன்று இப்படியொரு அந்தர்பல்டி தீர்மானத்தை முன்மொழியப் போகிறோம் என்பதை ஆகஸ்டு 29 - ஆம் தேதியன்று ஜெயலலிதாவே எண்ணிப்பார்க்கவில்லை என்பது மட்டுமல்ல, இத்தகையதொரு துரதிருஷ்டம் குறித்து சோதிடர்கள் கூட முதல்வரை எச்சரித்ததாகத் தெரியவில்லையே.

இந்த சட்டமன்றத் தீர்மானம் சில அரசியல் துணை விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. ''ஜெயலலிதாவைப் போல, காஷ்மீர் சட்டமன்றத்தில் அப்சல் குருவின் தூக்கு தண்டனைக்கு எதிராக நான் ஒரு தீர்மானம் நிறைவேற்றினால், அதற்கான எதிர்வினை இவ்வளவு அமைதியாக இருக்குமா?'' என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் காஷ்மீர் முதல்வர் ஓமர் அப்துல்லா. ''இதே தீர்மானத்தை இந்தக் கருணாநிதி நிறைவேற்றியிருந்தால் பிரிவினை வாதம், தேசத்துரோகம் என்று பத்திரிகைகள் என்னை பிரித்து மேய்ந்திருக்க மாட்டார்களா உடன் பிறப்பே'' என்று கேட்கத்தான் கலைஞரும் நினைத்திருப்பார்.

நாம் ஒப்புக்கொள்ள மறுத்தாலும், அம்மா உதைத்து விட்டிருக்கும் இந்தப்பாறையானது உருண்டு போகிற போக்கில் பல 'வரலாற்றுச் சிறப்புமிக்க' விளைவுகளை ஏற்படுத்தித்தான் செல்கிறது. தன்னுடைய அரசியல் ஆதாயத்துக்காக சுயேச்சையான பார்ப்பன பாசிஸ்டான ஜெயலலிதா அசைத்திருக்கும் இந்த ஆப்பில், அதிகாரபூர்வ பார்ப்பன பாசிஸ்டுகளான பாரதிய ஜனதாவினரின் உயிர்நிலை மாட்டிக்கொண்டுவிட்டது. அவர்கள் வாயைத் திறக்கிறார்கள், பல்லைக் கடிக்கிறார்கள். ஆனால் வார்த்தை வரமறுக்கிறது. 'அப்சல் குருவை உடனே தூக்கில் போடு' என்று தொடைதட்டியவர்கள், அம்மாவின் சட்டமன்றத் தீர்மானத்துக்குப் பின்னர், 'ஓமர் அப்துல்லா இப்படிப் பேசுவது துரதிருஷ்டவசமானது' என்று நெளிகிறார்கள்.

வட இந்திய ஆங்கில ஊடகங்களைப் பொருத்தவரை மூவர் தூக்குக்கு எதிராக தமிழக மக்கள் மத்தியில் எழுந்துள்ள பொதுக்கருத்தையோ, போராட்டங்களையோ அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அத்தகைய பொதுக்கருத்து தோன்றுவதற்கான நியாயம் ஈழத்தின் இனப்படுகொலையிலும் இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்பிலும் இருக்கிறது என்பதையும் அவர்கள் அங்கீகரிப்பதில்லை. 'இந்திய தேசியத்தின்' சந்தேகப் பட்டியலில் நிரந்தரமாக அவர்கள் தமிழகத்தை வைத்திருக்கிறார்கள். 'திராவிட-தமிழ் அரசியலை' தைரியமாக எதிர்கொண்டு நின்ற ஜெயலலிதாவும் இப்போது அதற்குப் பணிந்து விட்டார் என்பதுதான் அவர்களது மனக்குமுறல்.

தேசத்தின் முன்னாள் பிரதமரையே கொலை செய்த குற்றவாளிகளுக்கு ஆதரவாக வீதியில் போராட்டம் நடத்துவதும், அதனையொட்டி சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றுவதும் அவர்களை நடுங்கச் செய்கிறது. இது நீதித்துறையின் செயல்பாட்டில் குறுக்கிடுவதும் மிரட்டுவதும் ஆகும் என்று அந்த ஊடகங்களில் கருத்துரைக்கின்றனர் அதிகாரபூர்வ அறிவுஜீவிகள்.

இது அபத்தமானதும் அரசமைப்புச்சட்டம் அரசுக்கு வழங்கியுள்ள மன்னிக்கும் அதிகாரத்தை மறுப்பதும் ஆகும். நீதிமன்றம் தனக்கு முன்னால் வைக்கப்படுகின்ற சாட்சியங்களின் அடிப்படையில் குற்றத்தின் தன்மையையும் குற்றவாளிகளையும் முடிவு செய்து தண்டனை விதிக்

தனது மகன் உள்ளிட்ட மூவரின் தூக்கு தண்டனையை ரத்து செய்யக் கோரிப் போராடிய தமிழக மக்களுக்கு, தீர்ப்பின் பின் கண்ணீர் பெருக்கோடு நன்றி சொல்லும் பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள்.





படிப்பகம்

www.padippakam.com

கிறது. ஆனால் மன்னிக்கும் அதிகாரத்தை பெற்றிருக்கும் அரசு (Executive) குற்றத்தின் தன்மையை ஆராய்வதில்லை. குற்றவாளிகளின் சமூக, கலாச்சார பின்னணி, குறிப்பிட்ட குற்றத்தை இழைக்குமாறு அந்தக் குற்றவாளியைத் தூண்டிய காரணிகள், குற்றத்தின் சமூகப் பின்புலம் ஆகியவற்றை பரிசீலித்து மன்னிப்பு வழங்குவது பற்றி முடிவு செய்கிறது. மரண தண்டனையை ஆயுளாகக் குறைப்பது, ஆயுள்தண்டனையின் காலத்தை குறைப்பது ஆகியவை பற்றி மட்டும்தான் அரசு முடிவு செய்கிறதேயன்றி, குற்றத்திலிருந்து குற்றவாளிகளை விடுவிப்பதில்லை.

ராஜீவ் கொலை வழக்கையே எடுத்துக் கொள்வோம். இந்திய அரசு அதனை ஒரு பயங்கரவாத நடவடிக்கையாக சித்தரிப்பது மட்டுமின்றி, ராஜீவ் கொலை செய்யப்பட்ட நாளை பயங்கரவாத எதிர்ப்பு தினமாகவும் கடைபிடிக்கிறது. ஆனால் 'ராஜீவ் கொலை ஒரு பயங்கரவாதக் குற்றமல்ல' என்று தனது தீர்ப்பில் அழுத்தம் திருத்தமாகக் கூறும் உச்ச நீதிமன்றம், ராஜீவைத் தவிர வேறு யாரையும் கொலை செய்யும் நோக்கமோ இந்திய அரசை அச்சுறுத்தும் நோக்கமோ கொலையாளிகளுக்கு இல்லை என்றும், எனவே இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை தடா சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறது. இத்தீர்ப்புக்குப் பின்னரும் ராஜீவ் கொலையுண்ட நாளை பயங்கரவாத எதிர்ப்பு நாளாகத்தான் இந்திய அரசு கடைப்பிடித்து வருகிறது. ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் இந்த அயோக்கியத்தனத்தை அதிகாரபூர்வமான நீதிமன்ற அவமதிப்பு என்று சொல்வதா, அதிகாரபூர்வமற்ற அரசியல் குறுக்கீடு என்பதா?

ஒரு சாதாரண கொலைவழக்கை பயங்கரவாதமாக சித்தரிக்கும் இந்த அரசியல் மோசடியின் அடிப்படையில்தான் மூவருக்கும் எதிரான மரண தண்டனை மட்டுமின்றி, புலிகள் இயக்கத்தின் மீதான தடையும் மக்கள் மத்தியில் நியாயப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த வழக்கின் வாக்குமூலங்களும் சாட்சியங்களும் கைதிகளிடம் மிரட்டிப் பெறப்பட்டவை, அல்லது போலீசால் தயாரித்துக் கொள்ளப்பட்டவை. தடா சட்டத்தின் கீழ் பெறப்பட்ட இந்த சாட்சியங்களை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்காவிட்டால், குற்றவாளிகளை தண்டித்திருக்கவே முடியாது என விசாரணை அதிகாரி கார்த்திகேயன் அன்று கூறியது இங்கே நினைவு கூரத்தக்கது. ''ஆனானப்பட்ட ஜோன் ஆப் ஆர்க்கூடச் சித்திரவதை பொறுக்காமல் தன்னை ஒரு சூனியக்காரி என்று ஒப்புக்கொண்டாள். சித்திரவதைக்கு உட்படுத்தப்படும் மனிதன் எதையும் ஒப்புக்கொள்வான். எனவே தடா சட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் வாக்குமூலம் செல்லத்தக்கது என்று நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படுகிறதெனினும், அது பலவீனமான சாட்சியமே'' என்று கூறி உல்ஃபா இயக்கத்தை சேர்ந்த புய்யான் என்பவரை சமீபத்தில் (17.2.2011) விடுதலை செய்தது உச்சநீதிமன்றம். அப்படிப்பட்ட 'பலவீனமான' சாட்சியம்தான் இம்மூவரின் மரண தண்டனைக்கும் அடிப்படை.

அது மட்டுமல்ல, எந்த ஜெயின் கமிசன் அறிக்கையில் தி.மு.க. வின் புலி ஆதரவு பற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் காட்டி 1998 - இல் ஐக்கிய முன்னணி ஆட்சியைக் காங்கிரசு கவிழ்த்ததோ, அதே ஜெயின் கமிசன் அறிக்கை ராஜீவ் கொலை தொடர்பாக சந்திராசாமி, சுப்பிரமணியசாமி ஆகியோர் விசாரிக்கப்படவேண்டும் என்று கூறியிருந்தும், அதற்காகவே பலநோக்கு கண்காணிப்பு முகமை (MDMA) ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தும் அத்தகைய விசாரணை எதுவும் நடைபெறவில்லை. ஒரு அரசியல் கொலை வழக்கில், சந்தேகத்திற்கிடமான சிலரை விசாரிக்காமலிருக்கும்போதே ஏனையோரின் உயிரைப் பறிப்பது, அப்பட்டமான அநீதி மட்டுமல்ல, சந்தேகத்திற்கு இடமளிக்கும் சதியும் ஆகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்த திணிப்பு, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு, அமைதிப்படையை திரும்பப் பெற்ற வி.பி.சிங் மீது ராஜீவ் வெளியிட்ட கண்டனம் — ஆகியவற்றின் தொடர்ச்சியாகவும் எதிர்வினையாகவும் நடைபெற்றதே ராஜீவ் கொலை என்று கூறுகிறது உச்சநீதிமன்றத் தீர்ப்பு. இதுதான் இந்தக் 'குற்றத்தின்' அரசியல் பின்புலம். ராஜீவ் கொலையை ஏற்றுக் கொள்ள இயலாதவர்களும் எதிர்ப்பவர்களும் கூட, அதன் அரசியல் நியாயத்துக்குத் தம்மையறியாமல் தலைவணங்குவதன் விளைவுதான் மூவரின் தூக்கு தண்டனைக்கு எதிரான பொதுக் கருத்து.

'சங்கடமளிக்கும்' இந்த அரசியல் பின்புலத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, மனிதாபிமானம், நிரபராதிகள், மரணதண்டனை ஒழிப்பு என்றெல்லாம் பேசுவதன் மூலம் பரந்த மக்கட்பிரிவினரையும் அரசியல் கட்சிகளையும் இக்கோரிக்கைக்கு ஆதரவாகத் திரட்டிவிட முடியும் என்று கருதுவோர் அம்மயக்கத்திலிருந்து விடுபடவேண்டும். இம்மூவரின் இடத்தில் நிற்பவர்கள் தருமபுரி பேருந்து எரிப்பு வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளாக இருந்திருப்பின், தமிழகம் இவர்களைத் திரும்பியும் பார்த்திருக்காது. தன்னுடைய ரத்தத்தின் ரத்தங்களேயானாலும், அவர்களுக்காக ஜெயலலிதா ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கவும் முடியாது.

மரண தண்டனை ஒழிப்பு என்ற பொதுக்கோரிக்கை, ராஜீவுடைய போர்க்குற்றத்தை மூடும் வெள்ளைத்துணி ஆகிவிடக்கூடாது. குற்றம் ராஜீவுடன் முடியவில்லை. முள்ளிவாய்க்காலில் அனைத்தையும் முடித்துப் புதைக்கும் வரையில் இலங்கை இராணுவத்துக்கு இந்திய அரசு துணை நின்றது. இன்னமும் நிற்கிறது. அதனால்தான் பேரறிவாளனும், சாந்தனும், முருகனும் தூக்கு மேடையில் நிற்கிறார்கள். இந்திய இராணுவம் காஷ்மீர் மக்களின் சுதந்திரத்தை மறித்து நிற்பதனால்தான் அப்சல் குருவும் தூக்குமேடையில் நிற்க நேர்ந்திருக்கிறது.

கருப்புத்துணி மூடித் தூக்கிலிடப்படவோ, கருணை மனுவினால் விடுவிக்கப்படவோ முடியாத, உண்மையின் இந்த முகம்தான் மக்களைப் போராட்டத்தில் இறக்கியிருக்கிறது. மூவரையும் தூக்குமேடையிலிருந்து இறக்க வல்லதும் அதுதான்.

● மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

## டோல்கேட் வழிப்பறி:

# தனியார்மயக் கொள்ளை!



தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்கெனவே தனியார் பேருந்துகளும் லாரிகளும் ஒரு மாதத்துக்கு ஏறத்தாழ ரூ.3,000 செலுத்தி வந்த டோல் கேட் கட்டணம், இப்போது ரூ.38,000 முதல் ரூ.65,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது. இப்பகற் கொள்ளையை எதிர்த்தும், டீசல் விலையைக் குறைக்க வேண்டும், டோல்கேட் அமைந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்த லாரிகளுக்கு 50% வரியே வசூலிக்க வேண்டும், காலியான வாகனங்களுக்கு 25% வரியே வசூலிக்க வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளுடன் கடந்த ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் தனியார் பேருந்து, லாரி உரிமையாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். லாரிகள் ஓடாததால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டதோடு, காய்கறிகள்-தானியங்களின் விலை உயர்ந்து பொது மக்கள் பெருத்த பாதிப்புக்கு ஆளாகினர். கிருஷ்ணகிரி வட்டத்தின் அரசு போக்குவரத்துக் கழகம் மாதம் ரூ. 8 லட்சம் அளவுக்கு டோல்கேட் கட்டணம் செலுத்தி தொடர்ந்து நட்டப்பட்டு வருகிறது. இதைக் காரணம் காட்டி தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடக்கின்றன.

டோல்கேட் பகற்கொள்ளை என்பது பேருந்து - லாரி உரிமையாளர்களின் பிரச்சினை மட்டுமல்ல, நம் அனைவரின் பிரச்சினை என்பதை விளக்கி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட பு.ஜ.தொ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள், அதன் தொடர்ச்சியாக கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகே 19.8.2011 அன்று மாலை மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தின. பு.ஜ.தொ.மு. மாவட்டச் செயலர் தோழர் சங்கர் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளி தோழர் செல்வராஜ், பு.ஜ.தொ.மு. பாகலூர் பகுதி அமைப்பாளர் தோழர் இரவிச்சந்திரன், பு.ஜ.தொ.மு. மாவட்டத் தலைவர் தோழர் பரசுராமன் ஆகியோர் உரையாற்றினர். உள்ளூர் பேருந்து மற்றும் லாரி உரிமையாளர்கள் உழைக்கும் மக்களுடன் இணைந்து தனியார்மயக் கொள்ளைக்கு எதிராகப் போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தி நடந்த இந்த ஆர்ப்பாட்டம், இவ்வட்டாரமெங்கும் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

—பு.ஜ.செய்தியாளர், கிருஷ்ணகிரி.

# தண்ணீர்க் கொள்ளையர்களுக்கு எதிராக....

கோவை மாவட்டம், உடுமலை வட்டாரத்திலுள்ள இலட்சக்கணக்கான ஏக்கர் பாசனத்துக்கும் குடிநீருக்கும் உயிராதாரமாக உள்ள அமராவதி ஆற்றின் பிரதான கிளை வாய்க்காலான ஐயர் வாய்க்காலின் அருகே, அமராவதி அணையை ஒட்டி காக்டஸ் என்ற தனியார் நிறுவனம், உரிய அனுமதியின்றி அரசு அதிகாரிகளின் துணையோடு கடந்த ஆறு மாத காலமாக நாளொன்றுக்குப் பத்து இலட்சம் லிட்டர் அளவுக்குத் தண்ணீரை உறிஞ்சிப் புட்டிகளில் அடைத்து வியாபாரம் செய்து வருகிறது.

கடந்த ஏப்ரல்-மே மாதங்களில் அமராவதி அணையைச் சுற்றியுள்ள கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்ட போதிலும், காக்டஸ் நிறுவனம் எந்தக் கட்டுப்பாடுமின்றித் தண்ணீரை உறிஞ்சி வறட்சியைத் தீவிரமாக்கியது. தண்ணீரைத் தூய்மைப் படுத்தக் கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் இரசாயனங்களை இந்நிறுவனம் பயன்படுத்துவதால், அதன் கழிவுகளால் இப்பகுதி நிலத்தடி நீர் தொடர்ந்து நஞ்சாகி வருகிறது. இந்நிறுவனம் மேலும் இரு கிளைகளைத் தொடங்குவது மட்டுமின்றி, அமராவதி மினரல்ஸ் என்ற பெயரில் இன்னுமொரு நிறுவனமும் தண்ணீர்க் கொள்ளையில் இறங்கக் கிளம்பியுள்ளது.

பல்வேறு விவசாய சங்கங்களும் சில இயற்கை ஆர்வலர்களும் இத்தண்ணீர் கொள்ளைக்கு எதிராக பிரச்சாரம் செய்து வரும் நிலையில், அமராவதி அணைக்கு அருகிலேயே நடக்கும் இத் தீவட்டிக் கொள்ளையை எதிர்த்தும், இத்தண்ணீர் கொள்ளையால் வரப்போகும் பேரழிவை விளக்கியும் கிராமங்கள்தோறும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட பு.ஜ.தொ.மு., அதன் தொடர்ச்சியாக 10.8.2011 அன்று உடுமலையை அடுத்துள்ள கொழுமம் கிராமப் பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தோழர் தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கோவை மாவட்ட பு.ஜ.தொ.மு. செயலர் தோழர் விளவை இராமசாமி மற்றும் முன்னணியாளர்கள் உரையாற்றினர். விவசாயிகளும் உழைக்கும் மக்களும் திரளாகப் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், இவ்வட்டாரமெங்கும் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.




—பு.ஜ. செய்தியாளர், உடுமலை.



படிப்பகம்

www.padippakam.com

# அண்ணா ஹசாரே:

# கார்ப்பரேட் மீடியா கண்டெடுத்த கோமாளி!

**தனியார்மயத்தைப் பாதுகாக்க எண்ணும் ஏகாதிபத்தியங்களின் நேரடியான, மற்றும் மறைமுகமான கைப்பாவைகளின் கூட்டணியே ஹசாரேவின் அணி.**

***‘‘ -று கோடிக்கு மேல் மக்கட்தொகை கொண்ட இந்த நாட்டில் ஊடகங்களுக்கு பத்து நாட்கள் வேறு செய்தியே கிடைக்கவில்லை. எங்கள் சானல் வழியாகத்தான் அண்ணா ஹசாரே மக்களிடம் பேசுகிறார் என்றெல்லாம் கூடத் தொலைக்காட்சிகள் சொல்லிக்கொண்டன. முதலில் இதுவே மிகப்பெரியதொரு ஊழல். ஊடகங்களுக்கு உரிமம் கொடுத்திருப்பது செய்திகள் தருவதற்கு; யாருக்காகவோ பிரச்சாரம் செய்வதற்கு அல்ல. பிரச்சாரம் செய்வது என்றே கொண்டாலும், எல்லா சானல்களும் அதைச் செய்யக் காரணம் டி. ஆர்.பி ரேட்டிங்க்தான். அது தான் விசயம் என்றால் நீலப்படங்களைப் போட்டு சம்பாதிக்க வேண்டியதுதானே’’ - அருந்ததி ராய் (ஜன் லோக்பால் குறித்த பேட்டி, சி.என்.என். ஐ.பி.என் தொலைக் காட்சி)***

கடுமையான வார்த்தைகளாகத் தோன்றினாலும் -ற்றுக்கு -று உண்மைதான். ராம் லீலா மைதானத்தின் மேடையில் அண்ணா ஹசாரே போராடிக் கொண்டிருந்தார். அதாவது சாப்பிடாமல் படுத்துக் கொண்டிருந்தார். ஊர்ப்புறங்களில் ராப்பகலாக சைக்கிள் மிதிக்கும் சைக்கிள் வீரர் நிகழ்ச்சியையே பெரிய சைஸில் நடத்தியது போலிருந்த இந்தப் போராட்டத்தில், கொட்டு அடித்து நோட்டீஸ் கொடுக்கும் நபரின் பாத்திரத்தை கிரண் பேடியும் அருண் கேஜ்ரிவாலும் செய்தனர். ஓயாமல் தேசியக்கொடியை ஆட்டிக் கொண்டிருந்த கிரண் பேடி, ‘‘நம்முடைய அண்ணா நன்றாக இருக்கிறார்’’ என்று அவ்வப்போது அறிவித்துக் கொண்டிருந்தார். மைதானத்தில் கூடியிருந்த கூட்டம், ஐஸ் கிரீம், பாப்கார்ன், நொறுக்குத்தீனியைத் தின்றபடியே, ‘‘அண்ணா நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்’’ என்று கூறி தேசியக் கொடியை ஆட்டிக் கொண்டிருந்தார்கள். அரசியலில் இருப்பவர்களுக்கு கட்சிக்கொடி, அரசியலையே வெறுக்கும் நடுத்தரவர்க்க அற்பர்களுக்கு தேசியக் கொடி போலிருக்கிறது!

ஜன் லோக்பால் மசோதாவை அரசு நிறைவேற்றவில்லையென்றால், ‘‘உணவைத் துறப்பேன்’’ என்று ஹசாரே ஒருபுறம் எச்சரிக்க, ‘‘மசோதாவை நிறைவேற்றவில்லையென்றால் நான் உடையைத் துறப்பேன்’’ என்று அரசை எச்சரித்தார் விளம்பர நடிகை சலீனா வாலி. ஏர்டெல், டாடா, ரிலையன்ஸ் போன்ற நிறுவனங்களோ தங்களது வருமானத்தையே துறந்து, ‘‘ஊழலுக்கு எதிராகப் பேசுங்க பேசுங்க பேசிகிட்டே இருங்க, யாரும் காசு தர வேணாம்’’ என்று அறிவித்தன. இப்படி பல வகையறாக்களின் ஆதரவையும் பெற்றிருந்த ஹசாரே, அவர் யாரை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தாரோ அந்த அரசாங்கத்தின் ஆதரவையும் பெற்றிருந்தார் என்பதுதான் வியப்புக்குரிய செய்தி.

ஆகஸ்டு 16 - ஆம் தேதியன்று தடையை மீறப்போவதாக சொன்ன ஹசாரேயைக் கைது செய்து திகார் சிறையில் வைத்தது அரசு. ஏதேனும் ஒரு பங்களாவில் வைக்காமல் திகாரில் வைப்பதா என்ற விமரிசனங்கள் எழவே, திகார் சிறையையே பங்களாவாக மாற்றிக் கொடுத்தது அரசு. அதன்பின் 15 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஹசாரே உத்தரவிட்டதன் அடிப்படையில், ராம் லீலா மைதானத்தை சுத்தம் செய்து, தண்ணி தெளித்து, மேடை மைக்செட் ஏற்பாடு செய்து கொடுத்து, லத்திக் கம்பு இல்லாத போலீசுக்

ஒரு தலிச் சிறுமியின் கையாலும், ஒரு மு லீம் சிறுமியின் கையாலும் பழச்சாறு வாங்கிப் பருகி, உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளும் அண்ணா ஹஸாரே. இந்த முற்போக்கான முடிவுக் காட்சியின் மூலம் அண்ணா அரசியல்வாதியையும் விஞ்சிவிட்டார்.





படிப்பகம்

www.padippakam.com

காரர்களை காவலுக்கும் நிறுத்தி, இறுதியாக ஹசாரேயை அழைத்து வந்து மேற்படி போராட்டக் களத்தில் இறக்கியும் விட்டது அரசு. இதெல்லாம் அரசாங்கம் சொந்த செலவில் தனக்கே வைத்துக்கொண்ட சூனியமா, அல்லது வேறு ஏதேனும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக திட்டமிட்டு வழங்கிய மானியமா என்பது குறித்து காங்கிரசு கட்சிக்குள்ளேயே நடைபெற்று வரும் தீவிரமான விவாதம் இன்னும் முடிவடையவில்லை. இருந்தபோதிலும் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்துவிட்டது - ஹசாரேவுக்கு வெற்றி என்று அறிவிக்கப்பட்டும் விட்டது.

**''ஊடக முதலாளிகள் நினைத்தால், தாங்கள் எண்ணிய வண்ணம் இந்த தேசத்தின் நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கலாம், தாங்கள் விரும்பும் நபரை தேசத்தின் நாயகனாக்கலாம், வெறுக்கும் நபரையோ கட்சியையோ தனிமைப்படுத்தலாம் என்பதற்கு ஹசாரே நாடகம் ஒருசான்று.''**

என்ன வெற்றி, என்ன கோரிக்கைகள் நிறைவேறின என்று கேட்டால், தீவிர ஹசாரே ஆதரவாளர்களுக்குக் கூட விவரம் தெரியவில்லை. ஊழலை ஒழிப்பதற்கு ஜன் லோக்பால் என்றொரு மசோதாவை ஹசாரே கொண்டு வந்ததாகவும், முதலில் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த அரசு கடைசியில் வேறுவழியில்லாமல் ஏற்றுக் கொண்டுவிட்டதென்றும் பதிலளிக்கிறார்கள். இது உண்மையல்ல. லோக்பால் மசோதா தயாரிப்பது தொடர்பாக எங்களையும் கலந்து பேச வேண்டும் என்று துவக்கத்தில் அண்ணா ஹசாரே குழுவினர் கோரினர். அவர்களைக் கலந்து பேசிய ஐ.மு.கூட்டணி அரசு, முடிவில் பல் இல்லாத ஒரு லோக்பால் மசோதாவைக் கொண்டு வந்தது. இதை வைத்து ஊழலை ஒழிக்க முடியாது என்று கூறிய ஹசாரே குழுவினர், ஜன் லோக்பால் என்றொரு மசோதாவைத் தயாரித்தனர். பிரதமர், நீதிபதிகள் உள்ளிட்ட அனைவரையும் அதன் விசாரணை வரம்புக்குள் கொண்டு வந்தனர். ''எங்கள் மசோதாவை அப்படியே ஏற்றுக் கொண்டு ஆகஸ்டு 30க்குள் நிறைவேற்றவில்லையேல் போர்தான்'' - அதாவது பட்டினிப் போர் - என்று அறிவித்தார் ஹசாரே.

தொலைக்காட்சி ஊடகங்களால் ஊதி உப்ப வைக்கப்பட்டிருந்த தனது ஆளுமையைக் கண்டு தனக்கே பயம் ஏற்படும்போது இந்த அரசாங்கம் மட்டும் நம்மைக்கண்டு எப்படி அஞ்சாமலிருக்க முடியும் என்று எண்ணிய அந்த அசட்டுக் கோமாளி, தனக்கு எதிரில் சூயிங்கத்தை மென்று ஊதி பலூன் விட்டுக் கொண்டிருந்த இளைஞர் படையிடம், ''அமைச்சர் வீட்டை முற்றுகையிடுங்கள், எம்பிக்களை கெரோ செய்யுங்கள்'' என்று ஆணையிட்டார். அவர்கள் ஐஸ்கிரீம் வண்டிகள் மற்றும் பாவ் பாஜி கடைகளைத் தவிர வேறு எதையும் கெரோ செய்து அனுபவமில்லாதவர்கள் என்பது புரிந்தவுடன், ஹசாரே குழுவினர் இறங்கி வந்தனர்.

''மாநிலங்களில் லோக்பால், கீழ்நிலை அதிகார வர்க்கத்தை லோக்பால் சட்டத்தின் கீழ் கொண்டுவருதல், அரசு அலுவலகங்களில் என்னென்ன வேலை எத்தனை நாட்களில் முடியும் என்று அட்டை எழுதிக் கட்டுதல்'' - என்ற மூன்று விசயங்களை மட்டும் ஏற்பதாக நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினால் போதும்'' என்று ரொம்பவும் தரைமட்டத்துக்கு இறங்கி வந்தனர். அரசு அதற்கும் பணியாததால் பாரதிய ஜனதாவின் காலில் விழுந்து ஆதரவு கேட்டனர். அதற்குப் பின்னர் 'சும்மனாச்சிக்கும்' ஒரு விவாதம் மட்டுமே நடத்தி விட்டு, மற்றதையெல்லாம் நிலைக்குழு பார்த்துக் கொள்ளும் என்று கூறி விட்டது நாடாளுமன்றம்.

குப்புற விழுந்த ஹசாரேவைத் தூக்கி நிறுத்தி கையில் பெயர் வெட்டி தயாராக வைத்திருந்த கோப்பையைக் கொடுத்து, ''வெற்றி வெற்றி'' என்று வடிவேலு பாணியில் சத்தமாகக் கத்திவிட்டு, 12 நாள் கூத்தை முடிவுக்குக் கொண்டு வந்தன தொலைக்காட்சிகள். இதுதான் இந்த 12 நாள் பாரதப் போரின் கதைச்சுருக்கம்.

ஊடக முதலாளிகள் நினைத்தால் தாங்கள் எண்ணிய வண்ணம் இந்த தேசத்தின் நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கலாம், தாங்கள் விரும்பும் நபரை தேசத்தின் நாயகனாக்கலாம், வெறுக்கும் நபரையோ கட்சியையோ தனிமைப்படுத்தலாம் என்பதற்கு ஹசாரே நாடகம் ஒரு சான்று. ஊழல் ஒழிப்புதான் நாட்டின் தலையாய பிரச்சினை என்றும், அதனைச் சாதிப்பதற்கு ஹசாரேயைப் போன்ற நல்லொழுக்க நாட்டாமைகளே நமக்குத் தேவை என்றும் ஒரு பொதுக்கருத்தை உருவாக்கிய தொலைக்காட்சிகளில் முதன்மையானது டைம்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்திற்கு சொந்தமான டைம்ஸ் நவ் தொலைக்காட்சி. இந்த டைம்ஸ் குழுமத்தினர்தான் சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களின்போது, அரசியல் பிரமுகர்களிடம் கோடிக் கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு, அவர்களைப் போற்றிப் புகழும் செய்திகளை வெளியிட்டு பின்னர் பிடிபட்டவர்கள்: பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டிருக்கும் நிறுவனங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு, அந்த நிறுவனங்கள் பெரும் வளர்ச்சி காணும் என்ற பொய்க்கருத்தைத் தனது வாசகர்களிடையே பரப்பி, அந்நிறுவனங்களின் பங்குகளை வாங்க வைத்து அவர்களை போண்டியாக்கியவர்களும் இதனை ஒட்டி ''செபி''யிடம் பிடிபட்டவர்களும் இந்த யோக்கியர்கள்தான்.

இப்பேர்ப்பட்ட யோக்கியர்கள் திடீரென்று ஒரு 'மாபெரும்' ஊழல் ஒழிப்பு இயக்கத்தை ஸ்பான்சர் செய்கிறார்கள் எனும்போது சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



அண்ணாவை ஆதரித்துத் தமிழ்த் திரைப்படத் துறையினர் சென்னையில் நடத்திய உண்ணாவிரதம்: ஊழலை ஒழிக்கப் புறப்பட்டுள்ள கருப்புப் பணக்கும்பல்!

குறிப்பாக அலைக்கற்றை ஊழலின் நீதிமன்ற விசாரணையில் அம்பானி, டாடா, மன்மோகன் போன்றோரைக் குறித்த செய்திகள் அடுத்தடுத்து அம்பலத்துக்கு வந்து கொண்டிருந்த சூழ்நிலையில்தான், குறிப்பான அந்த விவகாரத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அரசியல்வாதிகளின் ஊழலை முன்னிலைப்படுத்துகின்ற ஹசாரே பிரபலப்படுத்தப் பட்டிருக்கிறார்.

தனியார்மய தாராளமயக் கொள்கைகளின் கீழ் பொதுச் சொத்துகளும், இயற்கை வளங்களும், பொதுத்துறைகளும் சட்டபூர்வமாகவே தரகுமுதலாளிகளுக்கும், பன்னாட்டு முதலாளிகளுக்கும் தாரை வார்க்கப்படும் காலத்தில் இருக்கிறோம். கல்வி, மருத்துவம் முதல் சாலைகள் வரையிலான அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டு, அவர்கள் அடிக்கும் கொள்ளைகள் அனைத்தும் சட்டபூர்வமாக்கப்பட்டு வரும் நிலையில், இந்த சட்டபூர்வ ஊழலான மறுகாலனியாக்கத்துக்கு எதிரான போராட்டங்களை முதன்மைப் படுத்துவதற்குப் பதிலாக, சட்ட விரோத ஊழலை ஒழிப்பதே முதற்கடமை என்று சித்தரிப்பதன் மூலம் தொந்திரவற்ற சேவையை பன்னாட்டு முதலாளிகளுக்கு அளிக்க முன்வருமாறு நம்மை அழைக்கிறார் ஹசாரே.

ஊழல் என்பது இந்திய அரசியல் இதுவரை அறிந்திராத பிரச்சினை அல்ல. ஒவ்வொரு தேர்தலிலும் ஆளும் கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைதான் இது. இந்திய அரசியலில் இந்திராவுக்கு எதிராக ஜெயப்பிரகாஷ் நாராயணும், ராஜீவுக்கு எதிராக வி.பி.சிங்கும் இதனை எழுப்பியிருக்கின்றனர். இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஊழல் எதிர்ப்பின் ஆதாயத்தை ஆர்.எஸ்.எஸ் கும்பல் தான் அறுவடை செய்துகொண்டது. தற்போது, ஹசாரே என்ற காந்திக் குல்லாய் அணிந்த இந்துத்துவவாதிக்கு கூட்டம் சேர்க்கும் வேலையை எல்லா இடங்களிலும் ஆர்.எஸ்.எஸ் தான் செய்திருக்கிறது. இதனை கோவிந்தாசார்யாவின் கூற்றே உறுதி செய்திருக்கிறது. 2ஜி, காமன்வெல்த் போன்ற ஊழல்களைக் குறிப்பிட்டுப் பேசிய ஹசாரே தவறிக்கூட எடியூரப்பாவின் ஊழலைப் பற்றியோ, பெல்லாரி கொள்ளையைப் பற்றியோ குறிப்பிடாததன் மூலமும், மோடியை மனமாரப் புகழ்ந்ததன் மூலமும், தான் ஆர்.எஸ்.எஸ் இன் கைப்பிள்ளைதான் என்பதை நிரூபித்திருக்கிறார்.

ஹசாரே முன்வைக்கும் இந்த ஜன் லோக்பால் அவரது சொந்த சரக்கல்ல. ஊழலை ஒழிப்பது-சிறந்த அரசாளுமை ஆகிய இரண்டும் உலகவங்கியின் முழக்கங்களாகும். 90 களில் துவக்கத்தில் ஊழலின் மொத்த உருவமே அரசுத்துறைதான் என்பதால், ஊழலை ஒழிப்பதற்கு தனியார்மயம்தான் தீர்வு என்று கூறி தனியார்மயக் கொள்கைகளை நியாயப்படுத்தின ஆளும்வர்க்கங்கள். இன்று தனியார்மயக் கொள்கைகள், ஊழலை முன்னிலும் பல்லாயிரம் மடங்கு பிரம்மாண்டமானதாக மாற்றியுள்ளன. எனினும் 'தனியார்மயத்தை ஒழி' என்று பேசுவதற்குப் பதிலாக, ஊழல் ஒழிப்புப் பணியை தன்னார்வக் குழுக்கள் உள்ளிட்ட தனியார் ஏஜென்சிகளிடம் கொடுத்துவிட்டு, அவர்களின் முன்னே கைகட்டி நிற்குமாறு அரசினைப் பணிக்கின்றன ஏகாதிபத்தியங்கள். தன்

**''அதிகாரவர்க்கத்தைக் கொழுக்க வைப்பதும் புதிய சட்டங்களால் அதனை ஆயுதபாணியாக்குவதும், ஊழலையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் அதிகரிப்பதற்கு மட்டுமே பயன்படும். அரசு எந்திரத்தைப் பொருத்தவரை, இது வரையிலான அனுபவங்கள் நமக்கு இதைத்தான் காட்டியிருக்கின்றன.''**



படிப்பகம்

னார்வக் குழுக்களின் அதிகாரத்தைத் தான் மக்களின் அதிகாரம் என்று ஏய்க்கின்றனர் ஹசாரே குழுவினர்.

ஆயுத போலீசு, சிறப்பு போலீசு ஆகியோர் போதாதென்று வீரப்பனைப் பிடிப்பதற்காக சிறப்பு அதிரடிப்படை ஒன்றை உருவாக்கியது போல, லஞ்ச ஒழிப்புத் துறை, விஜிலென்ஸ் கமிஷன் போன்ற அமைப்புகள் போதாதென்று 'சர்வ வல்லமை பொருந்திய' ஜன் லோக்பால் என்ற அதிரடிப் படையை உருவாக்கி இலஞ்சத்தை ஒழிக்கப்போவதாக கூறுகின்றனர். சிறப்பு அதிரடிப்படை எத்தனை அப்பாவிகளைக் கொன்றது, பெண்களை சிதைத்தது என்பதை நாம் அறிவோம். அதிகாரவர்க்கத்தை கொழுக்கவைப்பதும் புதிய சட்டங்களால் அதனை ஆயுதபாணியாக்குவதும், ஊழலையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் அதிகரிப்பதற்கு மட்டுமே பயன்படும். அரசு எந்திரத்தைப் பொருத்தவரை, இது வரையிலான அனுபவங்கள் நமக்கு இதைத்தான் காட்டியிருக்கின்றன.

கிரண் பேடி, அருண் கேஜ்ரிவால் உள்ளிட்ட ஹசாரே குழுவின் பலரும் தன்னார்வக் குழுக்களை நடத்துபவர்கள். ராக்ஃபெல்லர் பவுண்டேசனின் நிதியுதவியில் தரப்படும் மகசேசே விருது பெற்றவர்கள். நோபல் பரிசு, மகசேசே பரிசு போன்றவற்றைப் பெற்றவர்களைத்தான் ஜன் லோக்பால் அமைப்பில் நியமிக்க வேண்டும் என்று பச்சையாக அறிவிக்கும் அளவுக்கு இவர்கள் வெட்கம் கெட்ட பதவி வேட்டைக்காரர்கள். கார்ப்பரேட் கொள்ளைகள் மற்றும் ஊழலின் விளைவாகத் தனியார்மய தாராளமயக் கொள்கைகளும், அவற்றை அறிமுகப்படுத்திய மன்மோகன்சிங்கும் நடுத்தரவர்க்கத்தின் மத்தியிலேயே மதிப்பிழிந்து வருவதால், அரசியலுக்கு அப்பாற்பட்ட 'புனிதர்கள்' சிலரை முன்நிறுத்தி தனியார்மயத்தைப் பாதுகாக்க எண்ணும் ஏகாதிபத்தியங்களின் நேரடியான மற்றும் மறைமுகமான கைப்பாவைகளான தன்னார்வக் குழுக்களின் கூட்டணியே ஹசாரேயின் அணி.

• தொரட்டி

# ராம்லீலா மைதானத்தின் சென்னை அவதாரம்



அண்ணா ஹஸாரே ஆதரவாளர்கள் சென்னை-அடையாறில் நடத்திய உண்ணாவிரத ''ஷோ''.

**அண்ணா ஹசாரேயின் ஊழல் ஒழிப்பு உண்ணாவிரதத்துக்கு டெல்லியில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும், இந்தியாவில் மட்டுமின்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய பல் வேறு நாடுகளிலும் குடியேறியிருக்கும் இந்தியர்களின் பேராதரவு இருந்தது பற்றி வாசகர்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.**

**ஹசாரேயை ஆதரிக்கும் இந்தியர்களை ஒரு இடத்திலாவது நேரில் சந்தித்துப் பேச வேண்டும் என்று விரும்பிய வினவு இணையத்தின் செய்தியாளர்கள், சென்னையில் அண்ணா ஆதரவாளர்கள் நடத்திய நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தனர். இது பற்றி வினவு தளத்தில் வெளிவந்திருந்த அறிக்கையினை சுருக்கித் தருகிறோம்.**

சென்னை அடையாறு பகுதியில் இருக்கும் எல்.பி. ரோட்டையும் அதில் அண்ணாவின் தமிழக ஆதரவாளர்கள் குழுமியிருக்கும் கட்டிடத்தையும் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை. முகப்பிலேயே, ''குழந்தைக்குத் தேவை தாய்ப்பால். மக்களுக்குத் தேவை ஜன் லோக்பால்'' என்கிற அரசியல் முழக்கத்தை ப்ளக்ஸ் பேனரில் பிரம்மாண்டமாகக் கட்டி வைத்துப் பீதியூட்டியிருந்தனர். சாலையோர ப்ளக்ஸ் பேனர்களில் அண்ணா ஹசாரே, ''இந்தியனே எழுந்து வா'' என்று மிரட்டிக் கொண்டிருந்தார்.

ஐ.டி. துறையில் பணிபுரியும் சில அண்ணா ஆர்வலர்கள் வாயிலில் நின்று கொண்டு தேசியக் கொடியை தேசபக்தியுடன் ஆட்டியபடியே, ''கரப்ஷன்.. டவுன் டவுன்'' என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தியா-பாகிஸ்தான் மேட்சைப் பார்க்க வரும் ரசிகர்களைப் போல முகத்தில் மட்டுமின்றி, உடை மறைக்காத பகுதிகளையெல்லாம் தேசியக் கொடி வரைந்து மறைத்திருந்த சிலர், ''சார் சார் கரப்ஷனுக்கு எகென்ஸ்ட்டா ஒரே ஒரு சைன் பண்ணிட்டுப் போங்க, சார்'' என்று அழைத்துக் கொண்டிருந்தனர். நாங்கள் நுழைந்த நேரமாகப் பார்த்து ட்ரை சைக்கிளில் காய்கறிகளை வைத்து மிதித்துக் கொண்டு சென்ற ஒரு வியாபாரியையும் கையெழுத்திட அழைத்

**‘‘சார், ஊழலை ஒழிக்க ஒரு கையெழுத்து..’’ என்று ஒரு பெண் ஆர்வலர் இழுக்க...**

**‘‘அடப் போம்மே, வோட்டுப் போட்டே ஒழியல; கையெழுத்துப் போட்டாஒழியப்போவுது’’ என்றுகூறிவிட்டுசைக்கிளைஏறிமிதிக்க ஆரம்பித்தார் அந்தக் காய்கறி வியாபாரி.**

**‘‘இல்லிட்டரேட் மோரோன்’’ (படிப்பறிவற்ற முட்டாள்) என்று அந்தப் பெண் ஆர்வலர் முனகிக் கொண்டே முகத்தைச் சுளித்துக் கொண்டார்.**

தனர். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ‘‘இன்னாது இது?’’ என்று விசாரித்தார். ‘‘சார், ஊழலை ஒழிக்க ஒரு கையெழுத்து..’’ என்று ஒரு பெண் ஆர்வலர் இழுக்க, ‘‘ அடப் போம்மே, வோட்டுப் போட்டே ஒழியல; கையெழுத்துப் போட்டா ஒழியப்போவுது’’ என்று கூறிவிட்டு சைக்கிளை ஏறி மிதிக்க ஆரம்பித்தார். ‘‘இல்லிட்டரேட் மோரோன்’’ (படிப்பறிவற்ற முட்டாள்) என்று அந்தப் பெண் ஆர்வலர் பக்கத்தில் நின்ற வட இந்திய ஆர்வலரிடம் முனகிக் கொண்டே முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

கட்டிடத்தின் உள்ளே நுழைந்தோம். ‘‘ஊழலுக்கு எதிரான இந்தியா’’ எனும் தன்னார்வ இயக்கத்தின் தொண்டர்கள் பேஷன் பெரேடுக்கு வந்ததைப் போல் உடையணிந்து கொண்டு, லேப்டாப், ஐ.போன் சகிதம் பரபரப்பாகக் குறுக்கும் நெடுக்கும் ஓடிக் கொண்டிருந்தனர். அவர்களின் கழுத்திலும் இடையிலும் ஐ.டி. துறை ஊழியர்கள் அணிவது போல் புகைப்படத்துடன் கூடிய ஐ.டி. கார்டுகள் (அடையாள அட்டைகள்) தொங்கின.

உள்ளே ஒரு பெரிய ஹால். அதில் ஒரு பக்கம் மேடை போல அமைத்திருந்தனர். அதில் சிலர் அமர்ந்திருந்தனர். அதில் இரண்டு காவியுடைச் சாமியார்களைக் காண முடிந்தது. மூன்று இருபத்தோரு இன்ச் எல்.சி.டி. டிவிக்கள் பொருத்தியிருந்தனர். அதில் ‘‘டைம்ஸ் நெள’’ செய்திகள் ஓடிக் கொண்டிருந்தன. பக்கத்திலேயே கடந்த ஆறு நாட்களாக சோறு தண்ணீர் உட்கொள்ளாமல் உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கென்று தனியே கழிப்பறை அமைத்திருந்தனர்.

சில அய்யராத்து மாமிகள் தங்கள் குழந்தைகளுக்கு நேரு ட்ரெஸ் போட்டுக் கையில் கொடியோடு அழைத்து வந்திருந்தனர். அந்தக் குழந்தைகளை வரிசையாக மேடையில் நிற்க வைத்து போட்டோ பிடித்துக் கொண்டனர். இது இரண்டாம் சுதந்திரப் போராட்டமல்லவா? நாளைப் பின்னே நானும் கச்சேரிக்குப் போனேன் என்று பொளந்து கட்ட இது போன்ற ஆவணங்கள் அவசியமாயிற்றே? இதில் யார் குழந்தையை முன்னே நிறுத்தி முழுமையாக கவர் செய்து கொள்வது என்பதில் ‘‘சுதந்திரப் போராளி’’களின் தாய்மார்களுக்குள் லேசாக முட்டிக் கொண்டது. நாகரீக மனிதர்களல்லவா, தங்கள் உள்ளக்கொதிப்பை ‘‘ஷிட்’’ (எதற்கும் இலாயக்கில்லாத, முட்டாள் எனப் பல பொருள் கொண்ட பயன்பாட்டுக்குத் தகாத ஆங்கிலச் சொல் இது) என்று நாசூக்கான மொழியில் வெளியேற்றிக் கொண்டார்கள்.

மேடையை நெருங்கினோம். ஐந்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்த ஒருவர் காலாற நடக்க எண்ணி எங்களைக் கடந்து சென்றார். ஐந்து நாள் பட்டினிக்குப் பின்னரும் படுஉற்சாகமாக காணப்பட்ட அவரை அணுகிப் பேச்சுக் கொடுத்தோம். ‘‘சார், மொதல்லே ஜன்லோக்பால் அப்படிங்கறது ஒரு சமஸ்கிருத வார்த்தை. ஏற்கனவே இருக்கற லோக்பால் வேஸ்டு சார். இப்போ.. நாம ஒத்தர் மேல கம்பளெயின்ட் கொடுக்கறோம்னு வைங்க. ஒருவேள அது ருஜுவாகல்லேன்னா நம்பளயே பிடிச்சு உள்ள போட்ருவான் சார். ஆனா பாருங்க, இந்த ஜன் லோக்பால்ல அப்படியெல்லாம் சிட்டிசன்சுக்கு ப்ராப்ளம் இல்லை’’ என்று துவங்கியவரை நாம் இடைவெட்டினோம்.

‘‘இப்ப பாத்தீங்கன்னா, ஸ்பெக்ட்ரம் ஊழலையே எடுத்துக்கங்களேன். டாடா, அம்பானியெல்லாம்தான் இதனாலே பலன் அடைஞ்சிருக்காங்க. அவங்க கிட்ட இருந்து இந்த ஊழலாலே ஏற்பட்ட நட்டத்தை எப்படி வசூலிக்கறதுன்னு ஜன் லோக்பால் ஒன்னும் சொல்லலியே. அதுமட்டுமில்லாம, அண்ணா ஹசாரேவை ப்ரமோட் பண்ற டைம்ஸ் நெள சானலுக்கு ரிலையன்ஸ்தான் விளம்பரமும் கொடுக்கறாங்க. இதைப் பத்தி என்ன சொல்றீங்க’’ என்றோம்.

‘‘அதாவது சார்.. ஜன் லோக்பால் வந்தா நாட்டுக்கு நல்லது சார். அப்படி இல்லாட்டா அண்ணா ஹசாரே இவ்வளவு தூரம் போராட மாட்டாரே? வயசானவரு பாஸ் அவரு, புரிஞ்சுக்கங்க. ரிலையன்ஸைப் பொருத்தளவில இது அவங்களுக்கு பிஸினஸ் பாஸ். பொலிடிஷியன்ஸ் தான் இந்த மாதிரி டீலிங்ஸை பத்திரமா பாத்துக்கணும்.. ஏன்னா, அதுக்குத்தானே அவங்களை எலெக்ட் பண்ணிருக்கோம்? அப்படிச் செய்யாதபோது ஜன் லோக்பால் அவங்களை தண்டிக்கும் பாஸ்.’’

‘‘அது சரிங்க, ஆனா நீங்க சொல்றாப்ல பார்த்தா, ஆ.ராசா வாங்கின லஞ்சத்தை மட்டும் ரெக்கவர் பண்ணித் தர்றது தான் ஜன் லோக்பாலோட வேலை. ஆனா, அந்த ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரம் கோடில வர்ற மத்த அமௌன்டெல்லாம் பிஸினஸ்தானா?’’

‘‘நான் கொஞ்சம் பிஸி. நீங்க எங்க வாலண்டியர்ஸ் (தொண்டர்கள்) யார்ட்டயாவது பேசிப்பாருங்களேன்’’ என்றவாறே தப்பித்தார்.

தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்வதாக அறிமுகப்படுத்திக் கொண்ட இன்னொருவர், ‘‘பாஸ் இந்த நாட்டை ஆள்றது யார் தெரியுமா?’’ என்று கேட்டு எங்



படிப்பகம்

www.padippakam.com

**“முதல்ல இந்த சோனியா காந்திய நாட்டை விட்டுத் துரத்தினாலே ஊழல் ஒழிஞ்சுடும் சார். க்றிஸ்டியன் மிஷனரிஸோட சதி தான் சார் இப்ப நம்ம நாட்ல இத்தன ஊழல் நடக்கறதுக்கே காரணம்” என்று சொன்னார், அந்தத் தொண்டர்.**

**“அப்ப கர்நாடகாவில் எடியூரப்பா செய்த ஊழலுக்கும் ரோமன் கத்தோலிக் தான் காரணமா?” என்று சிரிக்காமல் முகத்தை வைத்துக் கொண்டே கேட்டோம்.**

களை உற்றுப் பார்த்தவர் எங்களிடம் இருந்து எந்த மறுமொழியும் வராதது கண்டு திருப்தியுற்றவராகத் தொடர்ந்தார். “ரோமன் கத்தோலிக்கக் கும்பல்தான் சார் இந்த நாட்டையே ஆள்றாங்க. முதல்ல இந்த சோனியா காந்திய நாட்டை விட்டுத் துரத்தினாலே ஊழல் ஒழிஞ்சுடும் சார். க்றிஸ்டியன் மிஷனரிஸோட சதி தான் சார் இப்ப நம்ம நாட்ல இத்தன ஊழல் நடக்கறதுக்கே காரணம்” என்று சொல்லி விட்டு ஏதோ பெரிய சதியைக் கண்டுபிடித்து விட்டவர் போல் பெருமையாகப் பார்த்தார்.

“அப்ப கர்நாடகாவில் எடியூரப்பா செய்த ஊழலுக்கும் ரோமன் கத்தோலிக் தான் காரணமா?” என்று சிரிக்காமல் முகத்தை வைத்துக்கொண்டே கேட்டோம்.

“ஆங்.. அது வேற பாஸ். நீங்க மொத்தமா பார்க்கணும் பாஸ்..”

“அப்படியா; ஆனா, ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு அடிப்படையாக அமைந்த சட்டங்களைப் போட்டதே பாரதிய ஜனதா ஆட்சியில தானே. அதுக்கும் ரோமன் கத்தோலிக் சதிதான் காரணமா?” என்று மீண்டும் அதே இடத்துக்கு வந்தோம்.

“சார்.. நீங்க கேட்டதையே கேட்கறீங்க.. முதல்ல ஒன்னு புரிஞ்சுக்கங்க. ஜன் லோக்பால எதிர்க்கறது யாரு? சோனியா தானே? அப்ப இது ரோமன் கத்தோலிக் சதி தானே? ரிசர்வேஷன் கொண்டாந்ததிலேர்ந்து எல்லா பிரச்சினைக்கும் காங்கிரஸ் தானே காரணம்.”

சரி, இதற்குமேல் முறுக்கினால் அறுந்து விடும் என்று நைசாக கேள்வியை மாற்றினோம். “லோக்கல் ஆளுங்க யாரும் வரலியே.. அதிகமா நார்த் இண்டியன் ஐ.டி. வொர்க்கர்ஸா தெரியறாங்களே?” என்றோம்.

“மொழியெல்லாம் பார்க்காதீங்க சார். இப்படிப் பாத்துப்பாத்துதான் தமிழ்காரன்னாலே நார்த்ல கேவலமா பாக்கறான். லோக்கல் சேனல்ல பெரியளவில கவரேஜ் பண்ண மாட்றான்.. இதே சன் டி.வி.யில ஒரு கவரேஜ் கிடச்சிருந்தா, ஒரு பத்தாயிரம் பேராவது வந்திருப்பான். ஆனா, இங்க வந்திருக்கவங்கெல்லாம் குவாலிட்டி பீபிள்.. தீஸ் பீபிள் கேன் மேக் சேஞ்சஸ்.. யு நோ (தரமான மனிதர்கள்...இந்த மனுசங்க மாற்றத்தக் கொண்டு வந்துடுவாங்க, தெரியுமா)” என்றார்.

“ஹசாரே புகழ் பாடும் டைம்ஸ் நௌ சேனல், பர்க்காதத் உள்ளிட்டுப் பலரின் மேலும் குற்றச்சாட்டு உள்ளதே? பாரதிய ஜனதாவே பல்வேறு ஊழல்களில் ஈடுபட்ட கட்சியாயிற்றே? இங்கும்கூடப் பல பாரதிய ஜனதா கட்சியினரையும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரையும் காண முடிகிறதே?”

“அதாவதுங்க நல்லவனோ கெட்டவனோ, ஒரு பொதுக்காரியம்னு வரும் போது சப்போர்ட் பண்ணா அதை ஏத்துக்கறதுதானே புத்திசாலித்தனம்?” என்று கூறியபடியே எங்களைக் கடந்து சென்றார் அவர்.

மொத்தக் கூட்டத்தில் சுண்டினால் சிவக்கும் வெள்ளை நிறம் கொண்டோர் சுமார் 80 சதவீதம். அவ்வகையில் சராசரி தமிழர்கள் யாரும் கண்ணில் தென்படவில்லை. எங்களுடன் பேசிய அனைவருமே சமச்சீர் கல்வியைக் கடுமையாக எதிர்த்தார்கள். இட ஒதுக்கீட்டை இகழ்ச்சியுடன் எதிர்க்கும் மனநிலையே பலருக்கும் இருந்தது. இதைத்தாண்டி, ஈழம், மூவர் தூக்கு, விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகள் குறித்து அவர்கள் அறிந்திருக்கவில்லை அல்லது கவலைப்படவில்லை. முக்கியமாக ஜன் லோக்பால் என்றால் என்ன என்று அநேகமாக யாருக்கும் தெரியவில்லை.

முகத்தில் தேசியக்கொடி பெயிண்ட் அடிக்க ரூ.20, பதிவுக் கட்டணம் ரூ.20, ஸ்டிக்கர் ரூ.10 என்று உள்ளே நுழைபவர்கள் கட்டாயமாக மொய் எழுதவேண்டும். இதைத்தாண்டி நன்கொடை தனி. டைம்ஸ் நௌ நேரடி ஒளிபரப்பிற்காக அவ்வப்போது ஒருவர் இயக்குநர் போல ஷாட்டை ரெடி செய்தார். காமரா முன்னர் அழகானவர்களை நிற்க வைத்து, காமரா பின்னால் இருவரை முழக்கமிட வைத்து, காமராவை கொஞ்சம் ஷேக் செய்து எடுப்பதன் மூலம் ஏதோ பெரிய கூட்டம் இருப்பது போன்ற ஸ்பெசல் எஃபெக்டை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். “ரோமன் கத்தோலிக்க சதி” என்ற ஆர்.எஸ்.எஸ். - இன் பிரச்சாரத்தை அம்பிகள் தொடங்கி மாமிகள் வரை அனைவரும் பேசினார்கள்.

இதற்கிடையே பாரத் மாதா கீ ஜே, வந்தே மாதரம் என்கிற கூச்சல்கள் காதைக் கிழித்துக் கொண்டு கிளம்பின. அண்ணாவின் ஆதரவாளர்கள் சிலர் பைக்கில் இந்நிகழ்வு நடக்கும் இடத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். சில கார்களும் அந்த பவனியில் வந்தன. காரின் பின் சீட்டில் ஒரு இளைஞர் வலது கையை சன்னலுக்கு வெளியே நீட்டியிருந்தார். அதில் ஒரு தேசியக் கொடியைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தார். இடது கையில் பாதி குடித்திருந்த நிலையில் ஒரு கிங் பிஷர் பாட்டில்! காரின் உள்ளே ஏர். ஆர். ரகுமான் உச்சஸ்தாயில் கத்திக் கொண்டிருந்தார் வண்ட்டே ஏஏஏ ஏமாத்தரம்ம்ம்ம்ம். ●



படிப்பகம்

www.padippakam.com

## அமெரிக்கக் கடன் நெருக்கடி:

# மைனரின் சாயம் வெளுத்தது!

**ஏனைய நாடுகளின் உழைப்பையும், சேமிப்பையும் உறிஞ்சி வாழும் ஒட்டுண்ணிதான் அமெரிக்கா.**

''உலகின் மிகப் பெரிய பணக்கார நாடு'' என அமெரிக்காவைப் பற்றி உலகெங்கிலும் திணிக்கப்பட்டிருந்த பிம்பத்தை, அந்நாட்டின் கடன் நெருக்கடி மீண்டுமொரு முறை கலைத்துப் போட்டுவிட்டது. உலகிலேயே மிகப் பெரிய கடனாளி நாடு அமெரிக்காதான் என்பதை மட்டுமின்றி, வல்லரசு அமெரிக்கா மஞ்சக் கடுதாசி கொடுக்க வேண்டிய போண்டி அரசாக இருப்பதையும் இந்தக் கடன் நெருக்கடி அம்பலப்படுத்தியிருக்கிறது.

1970-களில் 283 கோடி அமெரிக்க டாலராக இருந்த அமெரிக்காவின் கடன் சுமை, 2011-இல் 14.5 இலட்சம் கோடி டாலராக அதிகரித்துள்ளது. இந்தக் கடன் தொகையை இந்திய ரூபாயில் சொன்னால் (66,70,00,00,00,00,000 - அதாவது, 6.67 கோடியே கோடி ரூபாய்) அதிலுள்ள பூஜ்யங்களை எண்ணுவதற்கே தலை கிறுகிறுத்துப் போய்விடும். இம்மொத்தக் கடனில் சீனா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன் மட்டும் 4.5 இலட்சம் கோடி டாலர்கள்.

அமெரிக்க அரசின் ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும், செலவுகளைச் சமாளிக்க, அதாவது பற்றாக் குறையை ஈடுகட்ட வெளிச்சந்தையிலிருந்து எவ்வளவு கடன் பெற வேண்டும் என்ற வரம்பு தீர்மானிக்கப்படும். அரசின் செலவுகளைச் சமாளிக்க பட்ஜெட்டில் விதிக்கப்பட்ட இந்த வரம்பையும் தாண்டி கடன் வாங்க வேண்டிய நிலை உருவானால், அதற்கு அமெரிக்க காங்கிரசின் (நாடாளுமன்றத்தின்) ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.

காங்கிரசின் ஒப்புதலோடு பட்ஜெட்டில் விதிக்கப்பட்ட வரம்பையும் தாண்டிக் கடன் வாங்குவது அமெரிக்க அரசிற்குப் புதிய விசயமுமல்ல. ஆனால், கடந்த ஜூலை மாத இறுதியில் நடப்பாண்டு பட்ஜெட்டில் நிர்ணயிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி கடன் வாங்க வேண்டிய சூழல் அந்நாட்டின் ரிசர்வ் வங்கிக்கு ஏற்பட்ட பொழுது, அதற்கு காங்கிரசில் பெரும்பான்மை பலத்துடன் உள்ள எதிர்க்கட்சியான குடியரசு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டார்கள். கடன் வரம்பை உயர்த்துவதற்குப் பதிலாக, அமெரிக்க அரசு தனது செலவினங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என வாதிட்டது, குடியரசுக் கட்சி.

குடியரசுக் கட்சியின் நோக்கம், அமெரிக்காவின் கடன் சுமையைக் குறைக்க வேண்டும் என்பதெல்லாம் அல்ல. அக்கட்சியைச் சேர்ந்த ஜார்ஜ் புஷ் அதிபராக இருந்த பொழுது போர்ச் செலவுகளுக்காகவும், முதலாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட வரிச் சலுகையை ஈடுகட்டுவதற்காகவும் ஏழு முறை கடன் வரம்பு உயர்த்தப்பட்டது. அப்போது கடன் சுமை அதிகரிப்பது பற்றி அமெரிக்காவின் தீவிர வலதுசாரி கும்பல் எந்தக் கூப்பாடும் போடவில்லை. அமெரிக்க அரசு கல்வி, மருத்துவம், ஓய்வூதியம் போன்ற சமூக நலத்திட்டங்களுக்கு ஒதுக்கும் அற்பமான மானியத்தையும் ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற கொள்கையையுடைய குடியரசுக் கட்சியும் தீவிர வலதுசாரிக் கும்பலும் இக்கடன் நெருக்கடியை தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குக் கிடைத்த வாய்ப்பாக இப்பொழுது பயன்படுத்திக் கொண்டன.

4 இலட்சம் கோடி டாலர்கள் அளவிற்கு அரசின் செலவுகளைக் குறைக்க வேண்டும் என நிதியா

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள மியாமி நகரத் தெருவில், ''எனது குடும்பத்திற்கு சோறு போடுங்கள்'' எனப் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள வேலையிழந்த தொழிலாளி. (கோப்புப் படம்)






படிப்பகம்

www.padippakam.com

திக்கக் கும்பல்கள் நிர்பந்தித்து வந்த வேளையில், அடுத்த பத்து ஆண்டுகளில் 2.1 இலட்சம் கோடி டாலர்கள் அளவிற்குச் செலவுகளைக் குறைப்பது, செல்வந்தர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வரிச் சலுகையைத் தொடருவது என்ற சமரசத்தின் அடிப்படையில் கடன் வரம்பை உயர்த்திக் கொள்ள அமெரிக்க காங்கிரசில் உடன்பாடு ஏற்பட்டது. இதில் 1.3 இலட்சம் கோடி டாலர்கள் அளவிற்கு கல்வி, வீட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு சமூக சேவைத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானியத்தை வெட்ட இப்பொழுதே திட்டம் தயாராகிவிட்டது; மேலும், 1.5 இலட்சம் கோடி டாலர்கள் அளவிற்கு மானியத்தைக் கழித்துக் கட்டுவது பற்றி ஆலோசனை கூற, இரண்டு கட்சிகளையும் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.



வீட்டு அடமானக் கடன் சூதாட்டத்தில் மாட்டிக்கொண்டு வீட்டை இழந்தவர்கள் கலிஃபோர்னியா மாநிலத்தின் சாக்ராமென்டோ என்ற பகுதியில், தற்காலிகக் கூடாரங்களை அமைத்துக் கொண்டு வாழும் அவலம். (கோப்புப் படம்)

எனினும், நிதியாதிக்கக் கும்பல்கள் எதிர்பார்த்த அளவிற்கு செலவைக் குறைக்கும் வரம்பு நிர்ணயிக்கப்படாததால், அக்கும்பலின் கையாட்களுள் ஒன்றான ஸ்டாண்டர்ட் அண்ட் புவர் (Standard and Poor) என்ற தர நிர்ணய நிறுவனம், அமெரிக்காவின் கடன் வாங்கும் தகுதியினை ''ஏஏஏ'' - லிருந்து ''ஏஏ+'' ஆகக் குறைத்து, அமெரிக்க அரசிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்திருக்கிறது.

**அமெரிக்க அரசின் கடன் உயரக் காரணமென்ன?**

2000-ஆம் ஆண்டிற்குப் பிறகு, அமெரிக்கப் பொருளாதாரம் அடுத்தடுத்துப் பல நெருக்கடிகளில் சிக்கிக் கொண்டது. குறிப்பாக, 2008 - இல் ஏற்பட்ட வீட்டு மனைக் கடன் குமிழி வெடிப்பு அமெரிக்காவின் பொருளாதாரத்தை இரண்டாம் உலகப் போர் காலத்தில் ஏற்பட்டதைப் போல பெருமந்தத்தில் சிக்க வைத்தது. இப்பொருளாதார வீழ்ச்சிக்கு ஏற்ப அரசின் வரி வருமானமும் சரிந்து வீழ்ந்தது. குறிப்பாக, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்க அரசிற்குத் தனது செலவுகளை ஈடுகட்ட 307 கோடி அமெரிக்க டாலர்கள் தேவையாக இருந்தபொழுது, அம்மாதத்தில் அரசின் வரி வருமானம் வெறும் 172 கோடி அமெரிக்க டாலர்களாக இருந்தது. அரசின் கடனை அதிகரிக்காமல், அரசு தனது செலவுகளை - நிர்வாகச் செலவுகள், இராணுவச் செலவுகள், மருத்துவக் காப்பீடு போன்ற சமூக நலத் திட்டங்களுக்கான செலவுகள் மற்றும் வாங்கிய கடனுக்கான வட்டியையும், அசலையும் திருப்பிச் செலுத்துவது உள்ளிட்டவற்றை ஈடுக்கட்ட முடியாது என்ற நிலையை இந்தப் பொருளாதார மந்தம் அமெரிக்கா மீது திணித்தது.

அமெரிக்க அரசின் வரி வருமானம் வீழ்ந்து கொண்டிருந்த அதே சமயத்தில், அதிபராக இருந்த ஜார்ஜ் புஷ் பொருளாதாரச் சரிவைத் தூக்கி நிறுத்துவது என்ற பெயரில் அமெரிக்க கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் மேல்தட்டுப் பணக்காரர்களுக்கும் வரிச் சலுகைகளை வாரி வழங்கினார். அவர் அளித்த வரிச் சலுகையால் 2003 தொடங்கி 2008-ஆம் ஆண்டு முடிய அமெரிக்க அரசிற்கு 1.7 இலட்சம் கோடி டாலர்கள் வருமான இழப்பு ஏற்பட்டது. புஷ்ஷுக்குப் பின் பதவிக்கு வந்த ஒபாமா இந்த வரிச் சலுகையை ரத்து செய்யாததோடு, அதனை 2013-ஆம் ஆண்டு வரை நீட்டித்தும் உத்தரவிட்டார்.

இவ்வரிச் சலுகைகள் ஒருபுறமிருக்க, டாட் காம் பங்குச் சந்தை சூதாட்ட வீழ்ச்சி மற்றும் இரட்டை கோபுரத் தாக்குதல்களால் வீழ்ந்து கிடந்த பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த, முதலீட்டு வங்கிகளுக்கும், வேலியிடப்பட்ட நிதியங்களுக்கும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் வழங்கப்பட்டு, வீட்டு மனைக் கடன் சூதாட்டம் தீவிரமாக நடத்தப்பட்டது. 2008-இல் வீட்டு மனைக் கடன்

**''அமெரிக்காவின் பட்ஜெட் பற்றாக்குறையில் 70 சதவீதம் அமெரிக்காவின் இராணுவ மற்றும் போர்ச் செலவுகளால்தான் ஏற்படுகிறது. இந்தச் செலவுகளில் ஒரு பைசாவைக்கூடக் குறைத்துக் கொள்ள மறுக்கும் அமெரிக்க வலதுசாரி கும்பல், சமூக நலத் திட்டங்களுக்கான அரசின் செலவு கட்டுப்பாடின்றிச் செல்வதாகப் புளுகுணிப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது.''**



படிப்பகம்

www.padippakam.com

**''அமெரிக்காவில் என்னைப் போன்ற கோடீசுவரர்கள் யாருமே அதிகம் வரி செலுத்துவதில்லை. என் நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் 33 சதவீதம் முதல் 41 சதவீதம் வரை வரி செலுத்தும் பொழுது, பல கோடிகளைச் சம்பாதிக்கும் எனக்கு 17 சதவீத வரிதான்'' என அமெரிக்காவின் 'ஜனநாயகத்தை'ப் புட்டுவைக்கிறார், மிகப்பெரிய பங்குச் சந்தை சூதாட்ட வியாபாரியான வாரன் பப்பெட்.**

குமிழி உடைந்ததையடுத்து, புஷ் 700 கோடி அமெரிக்க டாலர்களையும் அவரையடுத்து வந்த ஒபாமா 814 கோடி அமெரிக்க டாலர்களையும் அமெரிக்க வங்கிகள் - தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமின்றி, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வங்கிகளுக்கும் மானியமாகவும், நிதியுதவியாகவும் அளித்தனர்.

அரசின் வரி வருமானம் சுருங்கிக்கொண்டே வந்த அதேசமயத்தில், அமெரிக்காவின் இராணுவச் செலவோ அதற்கு எதிர்விகிதத்தில் ஏறிக் கொண்டே போனது. தற்சமயம் அமெரிக்காவின் வருடாந்திர மொத்த இராணுவச் செலவு 1.2 இலட்சம் கோடி டாலர்களைத் தொட்டுவிட்டது. இது அமெரிக்காவின் பட்ஜெட்டில் 40 சதவீதமாகும். இந்த வருடாந்திர இராணுவச் செலவுகள் ஒருபுறமிருக்க, அமெரிக்கா ஆப்கானிலும், இராக்கிலும் நடத்திவரும் ஆக்கிரமிப்புப் போர்களுக்காக மட்டும் கடந்த பத்தாண்டுகளில் 1 இலட்சம் கோடி டாலர்களைச் செலவிட்டுள்ளது. ஒபாமா அதிபரான பின் ஆப்கானில் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதால், அந்த ஆக்கிரமிப்புப் போருக்காக மட்டும் மாதமொன்றுக்கு 200 கோடி அமெரிக்க டாலர்கள் செலவிடப்படுகிறது. மேலும், லிபியா மீதான தாக்குதலின் மூலம் ஒரு புதிய போர் முனையைத் திறந்திருக்கிறது, அமெரிக்கா. உலகைத் தனது ஒற்றைத் துருவ மேலாதிக்கத்தின் கீழ் இருத்தி வைப்பதற்காகவே இந்த இராணுவ மற்றும் ஆக்கிரமிப்புப் போர்ச் செலவுகளை வீங்க வைத்துக் கொண்டே போகிறது, அமெரிக்க ஆளும் கும்பல்.

அமெரிக்க வங்கிகள் நடத்திய பங்குச் சந்தை சூதாட்டத்தால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி; இந்நெருக்கடியையொட்டி அமெரிக்க வங்கிகளுக்கும், தொழிற்கழகங்களுக்கும் வழங்கப்பட்ட மானியம், நிதியுதவி, வரிச் சலுகை மற்றும் அமெரிக்காவின் போர்ச் செலவுகள் - இவைதான் 2007- இல் அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 42.6 சதவீதமாக இருந்த அந்நாட்டின் கடன் சுமையை இன்று 72.4 சதவீதமாக வீங்க வைத்துள்ளன. குறிப்பாக, முதலீட்டு வங்கிகளுக்கும், கார் கம்பெனிகளுக்கும் வழங்கப்பட்ட மானியத்தால் மட்டும் அமெரிக்காவின் கடன் சுமை 3.3 இலட்சம் கோடி டாலர்கள் அளவிற்கு அதிகரித்தது. அமெரிக்காவின் பட்ஜெட் பற்றாக்குறையில் 70 சதவீதம் அமெரிக்காவின் இராணுவ மற்றும் போர்ச் செலவுகளால்தான் ஏற்படுகிறது. இந்தச் செலவுகளில் ஒரு பைசாவைக்கூடக் குறைத்துக் கொள்ள மறுக்கும் அமெரிக்க வலதுசாரி கும்பல், சமூக நலத் திட்டங்களுக்கான அரசின் செலவு கட்டுப்பாடின்றிச் செல்வதாகவும் தகுதியற்றவர்களுக்கு அரசின் சலுகைகள் வாரி வழங்கப்படுவதாகவும் கூறி, பாசிச புளுகுணிப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. சமூக நலத் திட்டங்களுக்கான செலவை வெட்ட வேண்டும் என்பதில் கருத்தொற்றுமை கொண்டிருக்கும் ஒபாமாவும் குடியரசுக் கட்சியினரும், அதனை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதில்தான் வேறுபட்டு நின்று மோதிக் கொள்கிறார்கள்.

### ''தியாகம் செய்!'' – ஒபாமாவின் குரூரம்

''கடன் வரம்பை உயர்த்தாதே; சமூக நலத் திட்டச் செலவுகளைக் குறை'' எனக் கோரி அதிபர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தும் அமெரிக்காவின் நவீன வலதுசாரிக் கும்பல்.




அமெரிக்கக் குடும்பங்களைச் செலவழிக்க வைப்பதுதான் அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சியின் ஆணிவேராக இன்றும் இருந்து வருகிறது. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகவே வேலைவாய்ப்பும், தொழிலாளர்களின் சம்பளமும் தேங்கிப் போயிருந்த நிலையில், அமெரிக்கக் குடும்பங்களைச் செலவழிக்கச் செய்வதற்காகவே கடன் அட்டைகள் (Credit cards), வீட்டு அடமானக்கடன், கார்கடன், அவற்றுக்கான மானியங்கள் வாரி வழங்கப்பட்டன; இவற்றுக்கான வட்டி குறைக்கப்பட்டது. இந்தக் குமிழி உடைந்தபொழுது, அது அமெரிக்க அரசை மட்டுமல்ல, பெரும்பாலான அமெரிக்கக் குடும்பங்



படிப்பகம்


www.padippakam.com

களையும் போண்டியாக்கியதோடு, கடன்காரர்களாகவும் ஆக்கியது.

2005-க்கும் 2009-க்கும் இடைபட்ட காலத்தில் கருப்பின மக்களின் சொத்தின் மதிப்பு 53 சதவீதமும், அமெரிக்காவில் குடியேறியுள்ள இலத்தீன் அமெரிக்க மக்களின் சொத்து மதிப்பு 66 சதவீதமும், வெள்ளை இனத்தைச் சேர்ந்த நடுத்தர மற்றும் தொழிலாளர்களின் சொத்தின் மதிப்பு 16 சதவீதமும் சரிந்து வீழ்ந்தது. வீட்டு அடமானக் கடன் குமிழி வெடித்ததால், ஏறத்தாழ 1 கோடி அமெரிக்கர்கள் தங்களின் வீடுகளை இழந்து நடுத்தெருவுக்கு வந்தனர். வீட்டு அடமானக் கடன் கொடுத்த வங்கிகள் தங்களின் கடனுக்கு ஈடாக இச்சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டன.

வீட்டு அடமானக் கடன் குமிழி வெடித்த பின் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தையடுத்து, அமெரிக்காவில் மட்டும் ஏறத்தாழ 51 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். தற்சமயம் ஏறத்தாழ 2.5 கோடி அமெரிக்கத் தொழிலாளர்கள் நிரந்தர வேலையின்றியுள்ளனர்.

அரசு அளித்துள்ள புள்ளிவிவரங்களின்படியே, தற்பொழுது 4.4 கோடி அமெரிக்கர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர்; 4.9 கோடி அமெரிக்கர்கள் ''உணவுப் பாதுகாப்பின்றி'' வாழ்கிறார்கள். அன்றாட வாழ்க்கையிலிருந்து பட்டினியை ஒழிக்க முடியாத அமெரிக்க அரசு, பட்டினி என்ற வார்த்தையை அரசின் பதிவேடுகளில் பயன்படுத்துவதைச் சட்டபூர்வமாகத் தடை செய்து ஒழித்துவிட்டது.




வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடூர அவலம்: ''நான் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறேன்; மூன்று முதுநிலை முனைவர் பட்டங்களையும் பெற்றிருக்கிறேன்; ஆறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டிருக்கிறேன்; சோறு போட்டால் வேலை செய்யத் தயாராக இருக்கிறேன்'' என எழுதி வைத்துக்கொண்டு வேலை தேடும் அமெரிக்க இளைஞர்.

சமூக ஏற்றத்தாழ்வுகளோ கடந்த பத்தாண்டுகளில் அச்சுறுத்தக்கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கிறது. ''அமெரிக்க மக்கள் தொகையில் வெறும் 1 சதவீதமே உள்ள பெரும் பணக்காரர்கள்தான் இப்பொழுது அமெரிக்கப் பொருளாதாரத்தின் 40 சதவீதத்தைக் கட்டுப்படுத்துவதாக''க் கூறுகிறார், அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஜோசப் ஸ்டிக்லிட்ஸ். ''அமெரிக்காவின் தேசிய வருமானத்தில் 24 சதவீதத்தை இந்த 1 சதவீதப் பெரும் பணக்காரக் கும்பல் கைப்பற்றி அனுபவித்து வருவதாகவும்; 1980-களில் ஒரு அமெரிக்கத் தொழிலாளியின் சராசரி வருமானத்தைவிட 42 மடங்கு அதிக வருமானம் ஈட்டிவந்த அமெரிக்கத் தொழிற்கழகங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள், 2001-இல் 531 மடங்கு அதிக வருமானம் ஈட்டுவதாகவும்; 1980 தொடங்கி 2005-ஆம் ஆண்டு முடிய ஈட்டப்பட்ட அமெரிக்காவின் மொத்த தேசிய வருமானத்தில் ஏறத்தாழ ஐந்தில் நான்கு பகுதியை இந்த 1 சதவீதப் பெரும் பணக்காரக் கும்பல் கைப்பற்றிக் கொண்டுவிட்டதென்றும்'' கூறுகிறார், மற்றொரு பொருளாதார அறிஞரான நிக் கோலஸ் கிறிஸ்டாஃப்.

''அமெரிக்காவில் என்னைப் போன்ற கோடீசுவரர்கள் யாருமே அதிகம் வரி செலுத்துவதில்லை. என் நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் 33 சதவீதம் முதல் 41 சதவீதம் வரை வரி செலுத்தும்பொழுது, பல கோடிகளைச் சம்பாதிக்கும் எனக்கு 17 சதவீத வரிதான்'' என அமெரிக்காவின் 'ஜனநாயகத்தை'ப் புட்டு வைக்கிறார், மிகப் பெரிய பங்குச்சந்தை சூதாட்ட வியாபாரியான வாரன் பப்பெட். ''அமெரிக்க கோடீசுவரர்கள் மீது வரி விதியுங்கள்; இல்லையென்றால், இந்த ஏற்றத்தாழ்வு அமெரிக்காவில் கலகங்களை உருவாக்கும்'' எனக் கோடீசுவரர் பப்பெட் எச்சரிக்கும்பொழுது, கருப்பின அதிபர் ஒபாமாவோ, இழப்பதற்கு ஒன்றுமில்லாத அமெரிக்க மக்களிடம் தியாகம் செய்ய முன்வருமாறு உபதேசிப்பதைக் குரூரமான நகைச்சுவை என்றுதான் கூற முடியும்.

**''அமெரிக்கா போண்டியாகிவிட்டது என்பது இன்று உலகறிந்த உண்மை. எனினும், அந்த உண்மையை ஒப்புக்கொள்ளும்பட்சத்தில் உலக முதலாளித்துவப் பொருளாதாரம் அனைத்தும் அடுத்த கணமே போண்டியாகிவிடும். எனவே, கடவுள் இருக்கிறார் என்று ஒப்புக் கொள்வதைத் தவிர, மற்ற நாட்டு அரசுகளுக்கு வேறு வழி இல்லை.''**



படிப்பகம்

www.padippakam.com

### இது சாதாரண நெருக்கடியல்ல;
### மீளமுடியாத கட்டமைப்பு நெருக்கடி


அரசின் செலவுகளை அதிகப்படுத்தியும், உற்பத்தி சார்ந்த தொழில்களில் முதலீட்டை அதிகப்படுத்தியும் இந்தக் கடன் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள முடியும் என கெய்னிசிய முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் ஆலோசனை கூறுகின்றனர். ஆனால், அமெரிக்க கார்ப்பரேட் முதலாளிகள் தொழிற்துறையில் மூதலீடு செய்வதில்லை. கொள்ளை இலாபம் தருகின்ற நிதிச் சந்தைச் சூதாட்டத்தில்தான் முதலீடு செய்கின்றனர். உள்நாட்டில் முதலீடு செய்து உற்பத்தியில் ஈடுபடுவதைவிட, அயல்பணி ஒப்படைப்பையும் (Outsourcing) இறக்குமதியைச் சார்ந்திருப்பதையும்தான் அவர்கள் இலாபகரமானதாகக் கருதுகின்றனர். குறிப்பாக, வீட்டு மனைக் கடன் குமிழி உடைந்த பிறகு தமக்கு வழங்கப்பட்ட மானியங்களையும் நிதியுதவிகளையும் இக்கார்ப்பரேட் முதலாளிகள் நலிவடைந்து போன தமது போட்டி நிறுவனங்களைக் கைப்பற்றுவதற்கும், உலகெங்கிலும் சொத்துக்களை வாங்கி குவிப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, உற்பத்தி சார்ந்த தொழில்துறையில் முதலீடு செய்யவோ புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவோ பயன்படுத்தவில்லை.

பற்றாக்குறையைக் குறைக்க தொழில்துறை உற்பத்தியை அதிகப்படுத்துவது, கார்ப்பரேட் வரி வருமானத்தை அதிகப்படுத்துவது என்ற கொள்கையை அமெரிக்க ஆளும் கும்பல் தனது வரலாறு நெடுகிலும் தீண்டத்தகாததாகவே கருதி வருகிறது. இதற்கு மாறாக, மானியத்தை வெட்டுவது, ஆட்குறைப்பு செய்வது, சம்பளத்தை வெட்டுவது என்ற தாராளவாதக் கொள்கையைத்தான் இந்தக் கும்பல் சர்வரோக நிவாரணியாக முன்வைக்கிறது. ஏற்கெனவே பொருளாதார மந்தத்தில் சிக்கியுள்ள அமெரிக்கப் பொருளாதாரத்தை, இந்தத் தீர்வு - அரசு செலவுகளைக் குறைப்பது - மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் எனத் தெரிந்திருந்தும், இந்தச் சுய அழிவுப் பாதையைத்தான் அமெரிக்க நிதியாதிக்கக் கும்பல் அமல்படுத்தத் துணிந்துள்ளது. அமெரிக்க முதலாளிவர்க்கம் ஏன் இப்படிச் சிந்திக்கிறது என்ற கேள்விக்கு, அப்படிச் சிந்திக்கவில்லையென்றால், அது முதலாளித்துவ வர்க்கமாக இருக்க முடியாது என்ற லெனினினுடைய விளக்கத்தைதான் பதிலாகத் தர முடியும்.

அமெரிக்காவில் 2000-க்குப் பின் ஏற்பட்டு வரும் நெருக்கடிகள், குறிப்பாக வீட்டுமனைக் கடன் குமிழி வெடிப்பு பிரம்மாண்டமானதாக மட்டுமின்றி, உலகின் பல நாடுகளின் பங்குச் சந்தையையும், தொழிற்துறையையும் குப்புறக் கவிழ்க்கும் அளவிற்கு சர்வதேசத் தன்மை வாய்ந்ததாகவும் இருந்தது. தற்பொழுது தீவிரமான இந்தக் கடன் நெருக்கடியும்கூட, பல நாடுகளின் பங்குச் சந்தைகளைச் சரியச் செய்தது. இதன் காரணம், நிதி மூலதனப் பாய்ச்சல் உலகளாவிய தன்மை பெற்றிருப்பதும்; சீனா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா போன்ற நாடுகளின் பொருளாதாரங்கள் ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதாரங்களாக மாற்றப்பட்டு, அவை அனைத்தும் அமெரிக்கச் சந்தையை மட்டுமே நம்பியிருப்பதும்தான்.

தற்பொழுது உலகெங்கிலும் நடைமுறையில் இருந்து வரும் தனியார்மய - தாராளமயப் பொருளாதாரக் கொள்கையானது, அனைத்து நாடுகளிலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்து வருகிறது; பணப்புழக்கத்தை அதிகப்படுத்தியிருக்கிறது; உண்மைப் பொருளாதாரத்தைவிட நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை அதிகரித்திருக்கிறது. இம்மூன்றும்தான் நெருக்கடிகள் தோன்றுவதற்கும், அவை சர்வதேசத் தன்மை வாய்ந்தவையாக இருப்பதற்கும் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன.

‘‘உலகமயத்தின் பின் பல நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியானது, பணக்காரர்கள், சூப்பர் பணக்காரர்கள் மற்றும் அரசு நிறுவனங்களிடம் அளவுக்கு அதிகமாகச் செல்வத்தைக் குவியச் செய்கிறது. இச்செல்வம் நிதி மூலதன உலகில் புகுந்து பல ஆபத்தான வழிமுறைகளின் மூலம் - எடுத்துக்காட்டாக, வீட்டு மனைக் கடன் சூதாட்டம் - இலாப வேட்டையாடுவதற்காகச் சொத்துக்களின் மதிப்பை ஊதிப் பெருக்குகிறது; அடுத்தடுத்த குமிழிகளை உருவாக்குகிறது.’’




‘‘அமெரிக்காவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையும் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அந்நியச் செலாவணி கையிருப்பும் அதிகரித்துக் கொண்டே போகிறது. சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளிடம் குவியும் அந்நியச் செலாவணி உபரியானது மீண்டும் அமெரிக்காவிலேயே முதலீடு



படிப்பகம்

www.padippakam.com

**''தனியார்மய - தாராளமயப் பொருளாதாரக் கொள்கையானது, அனைத்து நாடுகளிலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்து வருகிறது; பணப்புழக்கத்தை அதிகப்படுத்தியிருக்கிறது; உண்மைப் பொருளாதாரத்தைவிட நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை அதிகரித்திருக்கிறது. - இம்மூன்றும்தான் நெருக்கடிகள் தோன்றுவதற்கும், அவை சர்வதேசத் தன்மை வாய்ந்தவையாக இருப்பதற்கும் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன.''**

செய்யப்படுவதால், இம்முதலீடு வீட்டுமனைக் கடன் போன்ற குமிழிகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது.''

''கடந்த முப்பதாண்டுகளில் உண்மைப் பொருளாதாரத்தைவிட நிதிமூலதனத்தின் ஆதிக்கம் பலமடங்கு அதிகரித்துள்ளதோடு, அதிலிருந்து பிரிந்து சுயேச்சையாகவும் இயங்கி வருகிறது. இது சொத்துக்களின் மதிப்பை ஊதிப் பெருகச் செய்தும் பின்னர் வெடிப்பை ஏற்படுத்தியும் நிதி உலகில் மட்டுமின்றி, உண்மைப் பொருளாதாரத்திலும் ஏற்ற இறக்கங்களையும் நிலையற்ற தன்மையையும் ஏற்படுத்துகிறது.''

- இம்மூன்று அடிப்படையான காரணிகள்தான், சமநிலையின்மைகள்தான் நெருக்கடிகளை அடுத்தடுத்து உருவாக்கி வருவதாகக் கூறுகிறார், மைக்கேல் லிம் மாஹ் ஹுய் என்ற பொருளாதார அறிஞர். இம்மூன்று சமநிலையின்மைகள் இல்லாத தனியார்மயம் - தாராளமயத்தைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது எனும்பொழுது, இக்கட்டமைப்பில் நெருக்கடிகள் தோன்றுவதையும், அவை சர்வதேசத் தன்மை வாய்ந்தவையாக இருப்பதையும் தவிர்த்துவிட முடியாது.

### அமெரிக்காவின் ஒட்டுண்ணித்தனம்

''அமெரிக்கா டாலர்களை உற்பத்தி செய்கிறது; உலகின் பிற பகுதியினர் அந்த டாலர்களால் வாங்கப்படும் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்'' என டாலரின் ஆதிக்கம் பற்றிக் கூறுகிறார், ஹென்றி லியூ என்ற பொருளாதார அறிஞர். உலகின் பிற பகுதியினர் என்பதில் சீனா, இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் மட்டுமல்ல; ரசியா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய வல்லரசு நாடுகளும் அடங்கும். இன்று உலகப் பொருளாதாரம் அமெரிக்கா என்ற ஒற்றை இஞ்சினில் ஓடிக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா விழுந்தால், வளர்ந்து வரும் நாடுகள் மட்டுமல்ல, பிற மேல்நிலை வல்லரசுகளும் சேர்ந்தே விழ வேண்டியதுதான். இந்த நாடுகள், தமது உற்பத்திப் பொருட்களின் சந்தைக்காக மட்டும் அமெரிக்காவைச் சார்ந்திருக்கவில்லை. ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் தாம் ஈட்டும் டாலரில் பெரும் பகுதியை அமெரிக்க அரசு வெளியிடும் கடன் பத்திரங்களில்தான் முதலீடு செய்கின்றன. அதனால்தான், அமெரிக்கப் பொருளாதாரத்தைத் தேள் கொட்டினால், இவர்களுக்கு நெறி கட்டிவிடுகிறது.

அமெரிக்கா இந்த நாடுகளை இரண்டு வழிகளில் பயன்படுத்திக் கொள்கிறது. இந்நாடுகளில் இருந்து மிகவும் மலிவான விலையில் நுகர்பொருட்களை இறக்குமதி செய்து, தனது சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறது. அமெரிக்காவின் இந்த இறக்குமதி சார்ந்த கொள்கையால் அதிகரித்துக் கொண்டே போகும் வர்த்தகப் பற்றாக்குறையை (ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகரிப்பதால் ஏற்படும் பற்றாக்குறை) டாலரை அச்சடித்தோ அல்லது தனது நாட்டில் முதலீடு செய்யப்படும் டாலர்களைக் கொண்டோ ஈடுகட்டிக் கொள்கிறது. வர்த்தகப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கு மட்டுமின்றி, அந்நிய நாடுகளில் அதிக வட்டியில் முதலீடு செய்வதற்கும், தனது போர்ச் செலவுகளுக்கும்கூடத் தனது நாட்டுக் கடன் பத்திரங்களில் பிற நாடுகள் முதலீடு செய்யும் டாலர்களைப் பயன்படுத்தி வருகிறது.

டாலரின் மேலாதிக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பிற நாடுகளின் உழைப்பையும், சேமிப்பையும் உறிஞ்சிக் கொழுக்கும் ஒட்டுண்ணியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் வாழுகிறது என்பதைதான் இது எடுத்துக் காட்டுகிறது. டாலருக்குப் போட்டியாக வேறொரு நாணயம் சர்வதேச செலாவணியாக வராதவரை அமெரிக்காவின் இந்த ஒட்டுண்ணித்தனம் கேள்விகேட்பாரின்றிச் செல்லுபடியாகும்.

பொருட்களை உற்பத்தி செய்வதைவிட, டாலரை இடையறாது அச்சடித்து, அதனை வெளியே புழக்கத்தில் விடுவதுதான் இப்பொழுது அமெரிக்காவில் இலாபகரமான வர்த்தகம் எனக் குறிப்பிடுகிறது எக்கானமிஸ்ட் என்ற இதழ். இதுநாள்வரை அமெரிக்காவில் அச்சடிக்கப்பட்ட மொத்த டாலரில் ஏறத்தாழ 70 சதவீத டாலர்கள் அமெரிக்காவுக்கு வெளியேதான் சுற்றிக் கொண்டுள்ளன. இதில் ஒரு 5 சதவீத டாலரை அமெரிக்காத் திரும்பப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டாலே அதன் பொருளாதாரம் நிலைகுலைந்து போய்விடும் எனக் கூறப்படுகிறது. எனினும், எண்ணெய் வளம் டாலருக்கு மட்டும் விற்கப்படுவது என்ற அலாதியான ஏற்பாட்டின் காரணமாகவும், தனது இராணுவ பலத்தைக் கொண்டும் டாலரின் புழக்கத்தையும், அதன் மேலாதிக்கத்தையும் அமெரிக்கா பாதுகாத்து வருகிறது.

டாலருக்கு மாற்றாக வரக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட யூரோ பிராந்தியத்தைச் சேர்ந்த ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சி, இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் வெறும் 0.1 சதவீதம்தான். அதே யூரோ பிராந்தியத்தைச் சேர்ந்த பிரான்சிலோ இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி சுழியமாகத்தான் இருக்கும் எனக் கூறப்படுகிறது. இந்த 'வளர்ச்சிக்கு'க்கூட இந்த நாடுகள் அமெரிக்காவைதான் நம்பியுள்ளன. அது மட்டுமின்றி, ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த கிரீஸ், ஸ்பெயின்,



படிப்பகம்

www.padippakam.com

போர்த்துகல், இத்தாலி உள்ளிட்டு 17 நாடுகள் அமெரிக்காவைவிட மோசமாகப் பொதுக் கடன் பிரச்சினையில் சிக்கித் திண்டாடி வருகின்றன. தனது உறுப்பு நாடுகளைக் கூடக் கைதூக்கிவிட முடியாத நிலையில் உள்ள ஐரோப்பிய யூனியன், அமெரிக்காவுக்கும் டாலருக்கும் மாற்றாக வர தற்சமயம் வாய்ப்பில்லை.

உலகப் பொருளாதாரம் அமெரிக்கா என்ற ஒற்றை இஞ்சினையே நம்பி இருப்பதால், அமெரிக்காவின் டாலரும், அதன் சந்தையும் சரிந்துவிடாமல் காப்பதில் ஏனைய நாடுகள் அதிக அக்கறை காட்டுகின்றன. தனக்கு மிகக் குறைந்த விலையில் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், குறைந்த வட்டியில் கடன் கொடுக்கவும் ஏனைய நாடுகள் தயாராக இருப்பதால், அமெரிக்க ஏகாதிபத்தியம் மைனரைப் போலக் கவலையின்றி இருக்கிறது.

டாலருக்கு மாற்றாக வேறொரு நாணயம் சர்வதேச செலாவணியாக வர வேண்டும் என்றால், அமெரிக்காவிற்குக் கடன் கொடுத்துள்ள நாடுகள் தமது டாலர் முதலீடுகளைத் திரும்பப் பெற வேண்டிய நிலை ஏற்படும். இப்படித் திரும்பப் பெறும் முதலீடுகளை மறு முதலீடு செய்ய ஒரு இடம் வேண்டும். அமெரிக்காவுக்கு பதிலாக தங்களது பொருட்களை நுகர்வதற்கான வேறொரு சந்தையையும் அவர்கள் தேட வேண்டும். இதற்கான வாய்ப்புகள் இப்போதைக்கு இல்லை என்பதால் டாலரின் மேலாதிக்கத்திற்கு பெரிய அச்சுறுத்தல் ஏதும் தற்சமயம் ஏற்பட வாய்ப்பில்லை.

அமெரிக்கா போண்டியாகிவிட்டது என்பது இன்று உலகறிந்த உண்மை. எனினும், அந்த உண்மையை ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் உலக முதலாளித்துவப் பொருளாதாரம் அனைத்தும் அடுத்த கணமே போண்டியாகிவிடும். எனவே, கடவுள் இருக்கிறார் என்று ஒப்புக் கொள்வதைத் தவிர மற்ற நாட்டு அரசுகளுக்கு வேறு வழி இல்லை.

இனி, அமெரிக்காவுக்குப் பொருளை விற்றவர்கள் பில்லைக் கொடுத்துப் பணம் கேட்டால் அமெரிக்க அரசு இப்படி வெளிப்படையாகவே பதில் சொல்லக்கூடும், ‘‘கனவான்களே, ஒரு நாள் பொறுத்துக் கொள்ளுங்கள். மெசின் ஓடிக் கொண்டிருக்கிறது; டாலர் நோட்டுகள் காய்ந்தவுடன் எடுத்து வெட்டி, எண்ணி, கட்டித் தந்து விடுகிறோம்’’. கடவுள் மீது நம்பிக்கை இருப்பவர்கள் பிரசாதத்தையும் நம்பித்தானே ஆக வேண்டும்.

● செல்வம்

# தனியார் கல்வி நிறுவனமா? கொலைகாரக் கூடாரமா?

கடந்த ஜூலை மாதம் 27-ஆம் தேதியன்று, விழுப்புரத்திலுள்ள இ.சாமிக்கண்ணு என்ற கல்வி வியாபாபாரியின் கல்வி நிறுவனங்களில் ஒன்றான ஏழுமலை பாலிடெக்னிக்கில் இரண்டாமாண்டு ஆட்டோமொபைல் படித்து வந்த மாணவரான பிரபாகரன், அந்நிறுவனத்தின் ஆசிரியரான குணசேகரன் என்பவரால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இத்தகவல் அறிந்த பு.மா.இ.மு. தோழர்கள் அப்பாலிடெக்னிக் மாணவர்களை ஒருங்கிணைத்து ‘‘கொலைகார குணசேகரனுக்குப் பிணை வழங்காதே! உரிய விசாரணை நடத்தி கொல்லப்பட்ட மாணவர் குடும்பத்துக்கு நட்ட ஈடு வழங்கு!’’ எனும் கோரிக்கையுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராடியவர்கள் மீது தடியடித் தாக்குதல் நடத்திய போலீசு, பு.மா.இ.மு.வினர் 8 பேர் மீது பொய்வழக்கு போட்டு சிறையில் அடைத்தது.

கொல்லப்பட்ட மாணவர் பிரபாகரனின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்ற பு.மா.இ.மு.வினர், தொடரும் இப்படு கொலைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து இ.எஸ். கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களைத் திரட்டினர். அதன் தொடர்ச்சியாக, ஆகஸ்ட் 3-ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடத்த போலீசிடம் அனுமதிக்கு விண்ணப்பித்த போது, கல்வி வியாபாரிக்கு ஆதரவாக நின்ற விழுப்புரம் போலீசு ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதித்தது. தடையை மீறி நாங்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம் என்று பு.மா.இ.மு.வினர் எச்சரித்த பின்னர், இறுதியில் போலீசு அனுமதி வழங்கியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பு.மா.இ.மு. மற்றும் தோழமை அமைப்பினர் பெருந்திரளாகப் பங்கேற்ற போதிலும், இ.எஸ். கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதில் பங்கேற்கக் கூடாது என்று அந்நிறுவனமும் போலீசும் மிரட்டியதால், அந்நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்க இயலவில்லை.




தனியார் கல்வி நிறுவனங்களின் பகற்கொள்ளையையும் கொலைகளையும் தோலுரித்துக் காட்டி, இ.எஸ். கல்வி நிறுவனத்தை அரசே ஏற்று நடத்தக் கோரி விண்ணதிரும் முழக்கங்களுடனும், பு.மா.இ.மு. மாநில அமைப்பாளர் தோழர் கணேசனின் சிறப்புரையுடனும் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் பகுதி வாழ் உழைக்கும் மக்களிடம் தனியார் கல்விக் கொள்ளையர்களுக்கு எதிராகப் போராட அறைகூவுவதாக அமைந்தது.

தகவல்:
புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணி, விழுப்புரம்.



படிப்பகம்

www.padippakam.com

## நார்வே படுகொலைகள்:

# நவீன நாஜிசத்தின் கோரத் தாண்டவம்

**முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி, ஐரோப்பாவில் வெள்ளையின-கிறித்தவ மதவெறியைத் தூண்டிவிடுவதற்கு நார்வே படுகொலைகள் சான்றாக அமைந்துள்ளன.**

உலகின் மிக அமைதியான பகுதி என அறியப்படும் ஸ்கேன்டிநேவியாவில் உள்ளதொரு ஐரோப்பிய நாடு, நார்வே. ஈழம் உள்ளிட்டு உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட பல நாடுகளில், ஏகாதிபத்திய உத்தியின்படி சமரசக் கட்டப்பஞ்சாயத்து செய்வதில் இந்நாடு பிரபலமானது. அகதிகளாகக் குடியேறுபவர்களுக்கு இந்நாட்டில் வழங்கப்படும் சலுகைகள் காரணமாக, ‘‘அகதிகளின் சொர்க்கம்’’ என இது அழைக்கப்படுகிறது. அது மட்டுமன்றி, நிம்மதியாக வாழத் தகுந்த நகரங்கள் உள்ள நாடுகளின் பட்டியலில், இது முதலிடத்தில் உள்ளது. இதனால், நார்வேயில் 1995 - க்குப் பின்னர் புதிதாகக் குடியேறுவோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. நார்வேயில் மட்டும் நான்கரை லட்சம் பேர், புலம்பெயர்ந்தோர் ஆவர். அவர்கள் பெரும்பாலும் ஆப்பிரிக்காவில் இருந்தும் மேற்காசிய நாடுகளிலிருந்தும் வருபவர்கள். ஈழத் தமிழர்களும் 15 ஆயிரம் பேருக்கும் மேலாக உள்ளனர். நார்வேயின் மக்கள் தொகையில் 11 சதவீதம் பேர் புதிதாகக் குடியேறியோரும், அவர்களின் வாரிசுகளுமே.

இப்படிப்பட்ட நார்வேயின் நிம்மதியைக் குலைக்கும் சம்பவங்கள் அண்மைக் காலமாக நடக்க ஆரம்பித்துள்ளன. அந்நாட்டின் தலைநகரான ஒஸ்லோவில் ஜூலை 22- ஆம் நாள் பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அரசு கட்டிடங்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட கார் குண்டுத் தாக்குதலில் இருவர் இறந்தனர். இச்சம்பவம் நடந்த அதே நாளில், ஒஸ்லோவிற்கு அருகிலுள்ள உத்தேயா எனும் தீவில் நடந்த தொழிலாளர் கட்சியின் இளைஞரணி நிகழ்ச்சியில் புகுந்த மர்ம நபர் ஒருவர், கண்மூடித்தனமாகச் சுட்டதில் 90 பேர் பரிதாபமாக உயிரிழந்து, நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தப் படுகொலைகள், மனநிலை பாதிக்கப்பட்டவனின் வெறிச்செயல் எனச் சொல்லப்பட்டாலும், சில நாட்களிலேயே இக்கொடூரத்தைச் செய்தவன் ‘நியோ நாசிச’ கோட்பாட்டைப் பின்பற்றும் ஆன்டெர்ஸ் பிரேவிக் என்பது தெரியவந்தது. இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு முன்னர் பிரேவிக், 1500 பக்கங்கள் கொண்ட தனது செயல்திட்ட அறிக்கையை இணையதளத்தில் வெளியிட்டிருந்தான். இந்த அறிக்கை நார்வேயில் புலம்பெயர்ந்துள்ள ஆப்பிரிக்க, மேற்காசிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் திட்டமிட்டு நார்வே பெண்களை மதம் மாற்றித் திருமணம் செய்வதன் மூலம் ஐரோப்பா இஸ்லாமியமயமாக்கப்படுவதாகவும், ஐரோப்பாவின் தூய்மை கெடுவதாகவும் சொல்கிறது. இதைத் தடுப்பதற்காக, இஸ்லாமியர்களுக்கு ஆதரவாக உள்ள தாராளவாதிகள், இடதுசாரிகள் மீது தாக்குதலைத் தொடுக்கச் சொல்லும் பிரேவிக், முதற்கட்டமாகப் புலம்பெயர்வோருக்கு ஆதரவான கொள்கைகளைக் கொண்ட தொழிலாளர் கட்சியின் மீது இந்தக் கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளான்.

மதச்சார்பின்மை பேசுவோரையும், கம்யூனிஸ்டுகளையும் முதலில் குறிவைத்துத் தாக்கவேண்டும் எனும் கருத்தில் இந்து மதவெறி பாசிசத்தோடு ஒத்துப் போகிற அதேசமயம், இனிமேல் புலம்பெயர்ந்து வரும் முஸ்லீம்களைத் தடுக்க வேண்டும் என்றும் ஏற்கெனவே நார்வேயிலுள்ள முஸ்லீம்கள் 2020 ஜனவரி முதல் நாளுக்குள் கிறித்துவத்துக்கு மாறாவிட்டால், அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்றும் அந்த நியோ நாசிச அறிக்கை கூறுகின்றது.



உத்தேயா தீவில் 90 பேரைக் கொன்றதற்காகக் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் வெள்ளையின-கிறித்தவ மதவெறியன் ஆன்டெர்ஸ் பிரேவிக் (இடது).



படிப்பகம்

www.padippakam.com

இந்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை நிறைவேற்றிடப் பல்வேறு நாடுகளிலிருந்தும் ஒத்த கொள்கையுடைய அடியாள் படைகளைத் திரட்டும் ஆலோசனையையும் பிரேவிக் முன்வைத்துள்ளான். குறிப்பாக, சீனாவிலுள்ள புத்த மத வெறியர்களையும், இந்தியாவிலுள்ள இந்து மதவெறியர்களையும், இஸ்ரேலின் யூத இனவெறிக் குழுக்களையும் உள்ளடக்கிய அடியாள் படை உருவாக்கப்பட வேண்டுமென்றும், ஒப்பந்த அடிப்படையில் 'புனிதப் போரை' நடத்திவிட்டு, வேலை முடிந்தபின் அவரவர் நாடுகளுக்கு அடியாட்கள் சென்றுவிட வேண்டும் என்றும் திட்டம் தீட்டியிருக்கிறான். இதற்காக ஐரோப்பாவில் மட்டுமல்லாமல், வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, ஆர்மீனியா, இஸ்ரேல், இந்தியா ஆகிய நாடுகளில் செயல்படும் 'கலாச்சார காவலர்'களின் மின்னஞ்சல் முகவரிகளையும் பிரேவிக் தொகுத்து வைத்திருக்கிறான்.



உத்தேயா தீவில் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன.

நார்வே தலைநகர் ஓஸ்லோவில் பிரதமர் அலுவலகத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட கார் குண்டுத் தாக்குதல்.



நார்வேயில் தற்போது தோன்றியிருக்கும் இந்த நியோ நாசிசக் குழுக்கள் ஐரோப்பாவிற்குப் புதிதல்ல. புனிதப் போர், இனத்தூய்மை என்கிற பெயரில் பல பயங்கரவாத அட்டூழியங்களை நடத்திக் கொண்டிருக்கும் இந்த நாசிசக் குழுக்கள் 1990-களுக்குப் பின்னர் ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்சு போன்ற நாடுகளில் செயல்பட்டு வருகின்றன. ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு அகதிகளாக வருபவர்களைத் தாக்குவதே அவற்றின் இலக்காக உள்ளது.

2008 - இல் உருவான ஏகாதிபத்திய உலகப் பொருளாதார நெருக்கடி நார்வேயிலும் வேலையிழப்பை அதிகரிக்கச் செய்ததால், அரசின் மீதான வேலையற்ற இளைஞர்களது அதிருப்தியும் அதிகரிக்கத் தொடங்கியது. இந் நெருக்கடியைத் தீர்க்க வக்கில்லாத ஆளும்வர்க்கம், அதிருப்தியைத் திசைமாற்றிவிட, அகதிகளாகக் குடியேறுபவர்களால்தான் நார்வே நாட்டினருக்கு வேலைவாய்ப்பு குறைவதாகவும், அரசு வழங்கும் பல சலுகைகள் குறைக்கப்படுவதற்கும் இதுவே காரணமென்றும் பிரச்சாரம் செய்து மக்களிடையே வெறுப்பை விதைத்தது. இந்த வெறுப்பு ஊதிப் பெருக்கப்பட்டு 'தூய ஐரோப்பா' எனும் நாசிச கருத்தியலாக வளர்ந்து, புலம்பெயர்ந்தோர் மீதான தாக்குதல்களாக அவ்வப்போது நடந்தன. பலரும் இத் தாக்குதல்களை ''கலாச்சார பன்முகத்துக்கு எதிரான தாக்குதல்'' எனக் கண்டித்தாலும், அடிமனதில் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான மனப்போக்கில்தான் உள்ளனர். நார்வேயில் மட்டுமல்ல, பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் இதுதான் நிலைமை.

ஸ்வீடன் நாடாளுமன்றத்திற்குச் சென்ற ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நிறவெறியும், இஸ்லாமிய எதிர்ப்பும் கொண்ட ஜனநாயகக் கட்சி 20 இடங்களில் வென்றது. இக்கட்சி புலம்பெயர்ந்தோருக்கான மானியங்களை வெட்டுவதையும், தலையில் கைக்குட்டை / தலைப்பாகை கட்டுதல் போன்ற பிற மத அடையாள சின்னங்



படிப்பகம்

www.padippakam.com

கள், ஸ்வீடிஷ் பாணியல்லாத கட்டிடங்கள் போன்றவற்றைத் தடை செய்வதையும் கோருகிறது. பின்லாந்தில் இருக்கும் புலம்பெயர்வோருக்கு எதிரான 'அசல் பின்லாந்தியர்கள்' எனும் தேசியவாத அமைப்பு, கடந்த ஏப்ரலில் நடந்த தேர்தலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. ''பின்லாந்தியம் என்பதே கிறிஸ்துவம்தான்'' என்பதுதான் அக்கட்சியின் முழக்கம். குரானையும் மசூதிகளையும் தடை செய்யக் கோரும், முஸ்லிம்களுக்குத் தலைவரி வசூலிக்கக் கோரும் நெதர்லாந்தின் சுதந்திரக் கட்சி சென்ற தேர்தலில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. டென்மார்க்கின் மக்கள் கட்சி ''கிறித்துவமே டேனிஷ் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த கூறு'' எனவும், ''டென்மார்க் புலம்பெயர்வோருக்கான நாடல்ல'' எனவும் கூறுகிறது. இவ்வாறு ஐரோப்பா முழுவதும் 'நியோ நாசிச'ப் போக்குகளைக் கொண்ட கட்சிகள் அரசியல் ரீதியாக வளர்ச்சியடைந்து வருகின்றன.

இஸ்லாமியர்களுக்கும், புலம்பெயர்ந்தவர்களுக்கும் எதிரான இத்தகைய இனவெறி நியோ நாசிசப் போக்குகளின் வளர்ச்சி, அந்தந்த நாட்டு ஆளும் வர்க்கங்களின் ஆசியோடுதான் நடக்கிறது. பொருளாதார நெருக்கடிகள் சமாளிக்க முடியாத அளவிற்கு வளர்ந்து கிரீஸ், ஸ்பெயின் என அடுத்தடுத்து ஐரோப்பிய நாடுகள் திவாலாகி மஞ்சள் கடுதாசி கொடுத்துவரும் நிலையில், வேலையிழந்து வீதிக்கு வந்திருக்கும் ஐரோப்பிய மக்களின் கோபம் தங்கள் மீது திரும்பாமலிருக்க, இந்நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் புலம்பெயர்ந்த ஆசிய- ஆப்பிரிக்க மக்களைப் பலிகிடாக்களாக்கி வருகின்றன.

இரண்டாம் உலகப் போருக்கு முன்பு இட்லரின் நாசிசத்தை ஊட்டி வளர்த்த அதே முதலாளித்துவம்தான், இன்று தனது நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக் கொள்ள, 'நியோ நாசிசத்தை'ச் சீராட்டி வளர்க்கிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட நியோ-நாசிசத்தின் கோரமான விளைவுக்குச் சாட்சியம்தான், பிரேவிக் போன்ற இனவெறியர்களின் வளர்ச்சியும் அவர்களின் கொலைவெறித் தாக்குதல்களும். பிரேவிக்கின் உடன்பிறப்புகள் இந்தியாவிலும் இருக்கிறார்கள் என்பதால், உழைக்கும் மக்கள் விழிப்புடனிருந்து இத்தகைய இனவெறி பாசிசக் கும்பல்களை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

• அன்பு

# 108 ஆம்புலன்ஸ்: சேவையா? சுரண்டலா?

தமிழகம் முழுவதும் 411 வாகனங்களைப் பல ஊர்களில் நிறுத்தி வைத்து, எதிர்பாராமல் நிகழும் சாலை விபத்துகள், மாரடைப்பு, தீக்காயங்கள் மற்றும் நோய்களுக்கு அவசர உதவிகளைச் செய்து, பாதிக்கப்பட்டோரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசென்று காப்பாற்றும் பணியைச் செய்து வருகிறது, 108 ஆம்புலன்ஸ் சேவை. ஆனால், இதில் பணியாற்றும் ஊழியர்கள் நிர்வாகத்தால் கசக்கிப் பிழியப்படும் கொடுமையும், இச்சேவையைப் பயன்படுத்தி ஜி.வி.கே. இ.எம்.ஆர்.ஐ. (அவசரகால மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கழகம் - Emergency Management and Research Institute) என்ற தனியார் நிறுவனம் அடிக்கும் கொள்ளையும் பலரும் அறியாதது.

நாளொன்றுக்கு 12 மணிநேரம் வீதம் இரண்டு ஷிப்டுகளில் பணிபுரியும் இதன் ஊழியர்கள், வாகனம் நிறுத்தப்பட்டுள்ள இடத்தில் ஓய்வறையோ, கழிவறையோ,குடிநீர் வசதிகூட இல்லாமல் கொத்தடிமைகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்டு சுரண்டப்படுகின்றனர். இதற்கு வட்டார, மாவட்ட மருத்துவத் துறை அரசு அதிகாரிகள் உடந்தையாக நின்று ஆதாயமடைகின்றனர். குறிப்பாக சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களின் அதிகாரியான (டி.எம்.) பால் ராபின்சன், தொழிலாளர்களைக் கேவலமாக வசைபாடுவதோடு, சட்டவிரோதமாக வேலை வாங்குவதும் மிரட்டுவதும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

இக்கொத்தடிமைத்தனத்துக்கு எதிராகக் குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் பு.ஜ.தொ.மு.வைத் தொடர்பு கொண்ட பிறகு, தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை விளக்கியும் தனியார்மயக் கொத்தடிமைத்தனத்தை அம்பலப்படுத்தியும் துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் வாயிலாகப் பிரச்சார இயக்கத்தை பு.ஜ.தொ.மு. மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக, 18.8.2011 அன்று மாலை இராமநாதபுரம் அரண்மனை வாயிலருகே சிவகங்கை - இராமநாதபுரம் மாவட்டங்களின் பு.ஜ.தொ.மு. அமைப்பாளர் தோழர் நாகராசன் தலைமையில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. ஆர்ப்பாட்டத்தில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று 108-இன் நிர்வாகம் மிரட்டியபோதிலும் அதனைத் துச்சமாக மதித்து -ற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.



இந்த ஆர்ப்பாட்டம், தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளதோடு, தமிழகமெங்கும் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களை அமைப்பாக்கிப் போராட உந்துவிசையாக அமைந்தது.

-பு.ஜ. செய்தியாளர், சிவகங்கை.



படிப்பகம்

www.padippakam.com

## காஷ்மீர்:

# அம்பலமானது இந்திய அரசின் இனப்படுகொலை

**தீ**விரவாத - பிரிவினைவாத எதிர்ப்பு என்ற பெயரில் காஷ்மீரில் நடத்தப்பட்டுவரும் 'தேசபக்த' இனப்படுகொலைகள் பற்றிய உண்மைகள், அண்மையில் ஜம்மு - காஷ்மீர் மாநில மனித உரிமைகள் கமிசன் வாயிலாக வெளிச்சத்துக்கு வந்து நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. காஷ்மீரில் அப்பாவிகளான 2730 பேர் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு, போலி மோதல்களில் சுட்டுக் கொல்லப்பட்டு பாரமுல்லா, பண்டிபோரா, ஹந்த்வாரா, குப்வாரா ஆகிய நான்கு மாவட்டங்களில் 38 இடங்களில் 'அடையாளம் தெரியாதவர்கள்' என்ற பெயரில் கல்லறைகளில் புதைக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் உடல்கள் இரகசியமாக இடுகாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, காஷ்மீர் போலீசாரால் புதைக்கப்பட்டுள்ளன.

1990 - களில் காஷ்மீரில் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் புதிய வேகத்தில் முன்னேறத் தொடங்கியதிலிருந்து இதுவரை பல்லாயிரம் பேர் 'காணாமல் போயுள்ளனர்'. ஆனால், மாநில அரசாங்கமோ 3744 பேர் மட்டுமே காணாமல் போயுள்ளதாகவும், 1990-லிருந்து அவர்கள் பாகிஸ்தானில் தங்கி ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டுத் தீவிரவாதிகளாக மாறியுள்ளதாகவும் தெரிவித்தது. இதை ஏற்க மறுத்து கணவரையும் புதல்வர்களையும் உறவினர்களையும் பறிகொடுத்த காஷ்மீரிகள் ''காணாமல் போனவர்களின் பெற்றோர் சங்க''த்தின் மூலம் தொடர்ந்து போராடியதன் விளைவாக, அம்மாநிலத்தின் மனித உரிமை கமிசன் தனது புலனாய்வுப் பிரிவைக் கொண்டு விசாரணையை மேற்கொண்டது. காணாமல் போனவர்களின் உறவினர்கள் அளித்த சாட்சியங்களின் அடிப்படையில், அடையாளம் தெரியாதவர்கள் என்று புதைக்கப்பட்ட கல்லறைகளில் 574-ஐத் தோண்டிப் பிணங்களைச் சோதித்தபோது, அனைவரும் காஷ்மீரின் உள்ளூர் வாசிகள் என்று இப்போது ஆதாரத்துடன் நிரூபணமாகியுள்ளது.

காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் சங்கத்தின் கூற்றுப்படி, கடந்த 1989 முதல் 2009 வரையிலான காலத்தில் 70,000 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் தீவிரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். அம்மாநிலத்தை ஆக்கிரமித்துள்ள 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணுவ மற்றும் துணை இராணுப்படைகள் கண்மூடித்தனமாக இப்படுகொலைகளை நடத்தியுள்ளன. தீவிரவாதிகளைக் கொன்றொழித்தால் பரிசுகளும் பதவி உயர்வும் இந்திய அரசால் அளிக்கப்படுவதால் போட்டிபோட்டுக் கொண்டு மோதல் என்ற பெயரில் உதிரத்தையே உறைய வைக்கும் படுகொலைகளும், போலீசு கொட்டடிக் கொலைகளும் கேள்விமுறையின்றி நடத்தப்பட்டுள்ளன.

இந்திய இராணுவத்தின் அரசு பயங்கரவாத இனப்படுகொலை அம்பலமானதைத் தொடர்ந்து, அனைத்துலக பொதுமன்னிப்புக் கழகமும் (ஆம்னஸ்டி), அமெரிக்கா மற்றும் பிற நாடுகளின் மனித உரிமைக் கங்காணி அமைப்புகளும் மாநிலம் முழுவதுமுள்ள அடையாளம் தெரியாதவர்களின் கல்லறைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும், அக்கல்லறைகளும் பாதுகாப்புப் படையினரால் பாதுகாக்கப்பட்டு, மரபணுவியல் - தடயவியல் நிபுணர்கள் மூலம் சிதைந்த எலும்புகளைக் கொண்டு சோதனை நடத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளது. மனித உரிமைகள் கமிசனிடம் சாட்சியமளித்தவர்களுக்கும், மனித உரிமை இயக்கச் செயல்வீரர்

இந்திய இராணுவத்தால் இரகசியமாகக் கொன்று புதைக்கப்பட்டதால் காணாமல் போன தனது அன்பு மகனின் புகைப்படத்தைப் பார்த்து விம்மியழும் காஷ்மீரத் தாய் (இடது). அடையாளம்தெரியாதவர்களின் கல்லறைகள்: வெளிச்சத்துக்கு வரும் இந்திய இராணுவத்தின் பயங்கரவாத அட்டூழியம்.








படிப்பகம்

www.padippakam.com

களுக்கும், கமிசனின் புலனாய்வுப் பிரிவினருக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்; காணாமல் போனவர்கள் பற்றி முழுமையான நீதியான வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும்; குற்றம் சாட்டப்பட்டவர்களும் சந்தேகப்படுபவர்களும் அனைத்துலக நீதிமன்றத் தரத்தின்படி விசாரிக்கப்பட வேண்டும்; பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசைக் கோரியுள்ளன.

காஷ்மீர் மாநில அரசும் மைய அரசும் இது குறித்து இன்றுவரை மௌனம் சாதிக்கின்றன. மனித உரிமைக்கும் உயிர் வாழும் உரிமைக்கும் இந்திய அரசு பயங்கரவாதிகளால் மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள போதிலும், நாட்டுக்கே அவமானத்தை ஏற்படுத்தியுள்ள இந்த இனப்படுகொலையைக் குறித்து அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் இன்னமும் வாய்திறக்காமல் இருப்பதுதான் அதைவிடப் பெருத்த அவமானம்.

காஷ்மீரில் மட்டுமல்ல, இதற்கு முன் பஞ்சாபில் பயங்கரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் 1984 முதல் 1995 வரை இதேபோல மோதல் படுகொலைகளும் சாமானியர்கள் காணாமல் போவதும் நடந்துள்ளன. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் இத்தகைய அரசு பயங்கரவாதப் படுகொலைகளும் அட்டூழியங்களும் இன்றும் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன.

ஈழத்தில் இனப்படுகொலை பயங்கரவாதத்தை நடத்திய ராஜபக்சே அரசு போர்க் குற்றவாளி என்றால், காஷ்மீரில் துடிக்கத்துடிக்க இனப்படுகொலைகளை இரகசியமாக நடத்தியுள்ள இந்திய அரசும் அதன் இராணுவமும் புனிதர்களா? இத்தகைய அட்டூழியங்களை நடத்திவரும் போலீசு - இராணுவத்துக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, காஷ்மீரில் காலனிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதுதான் தேசிய ஒருமைப்பாடா? - ஜனநாயக உணர்வு கொண்ட ஒவ்வொருவரையும் உலுக்கும் கேள்விகளே இவை.

• முத்து

# 'தற்குறிகளின்' கலகமும் கனவான்களின் கலக்கமும்


## பிரிட்டனில் வெடித்த இளைஞர்களின் போராட்டம், தனியார்மயம் திணித்துள்ள ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்த போராகும்.

வெடிமருந்து நிரம்பிய கப்பல் தீப்பிடித்து எரிவதைப் போன்ற நிலைமையில்தான் இங்கிலாந்து உள்ளது என்பதை அங்கு நடந்த இளைஞர்களின் கலகம் எடுத்துக் காட்டியிருக்கிறது. கடந்த ஆகஸ்டு மாதம் 6 அன்று இலண்டனின் புறநகர்ப் பகுதியான டாட்டன்ஹாம் என்ற இடத்தில் தொடங்கிய இக்கலகம், காட்டுத் தீ போல அந்நகரில் அடித்தட்டு மக்கள் வசிக்கும் வடக்கு, கிழக்கு, தென் கிழக்கு பகுதிகளுக்கும், மேட்டுக்குடி கனதனவான்கள் வசிக்கும் மேற்குப் பகுதிகளுக்கும்; பிர்மிங்ஹாம், மான்செஸ்டர், லிவர்பூல், பிரிஸ்டால் எனப் பிற நகரங்களுக்கும் பரவியது.

இக்கலகம் நடந்த பகுதிகளில் எல்லாம் கலகக்கார இளைஞர்கள் போலீசாருடன் நேரடியான மோதலில் ஈடுபட்டனர். இக்கலகத்தின்பொழுது பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான ஆடம்பர நுகர்பொருட்களை விற்பனை செய்யும் சங்கிலித் தொடர் விற்பனை நிலையங்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டன. ஆசியர்களுக்குச் சொந்தமான சில சில்லறை விற்பனைக் கடைகளும் இளைஞர்களின் தாக்குதலுக்கு ஆளாயின. சங்கிலித் தொடர் விற்பனை நிலையங்களுக்குள் புகுந்த இளைஞர்கள் பகட்டு வாழ்க்கையின் சின்னங்களாக அறியப்படும் நைக் ஷூ, குக்கி ஜீன்ஸ் (Gucci jeans) போன்ற ''பிராண்டட்'' (Branded) நுகர்பொருட்களைத் 'திருடி'ச் சென்றனர்; தெருவோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் இவர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

ஏறத்தாழ ஒரு வார காலம் நடந்த இக்கலகத்தை கிரிமினல் கும்பலின் நடவடிக்கை எனச் சாடியது, இங்கிலாந்து அரசு. கலகத்தின் சமூகப் பின்னணியை ஆராயாமல், அதனை ஒடுக்க ரப்பர் குண்டுகளையும், தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் பீரங்கிகளையும் இறக்கி விடுங்கள் என ஓலமிட்டது, இங்கிலாந்து பணக்கார வர்க்கத்தின் பிரதிநிதிகளான வலதுசாரி கும்பல். மற்ற நகரங்களைவிட, சர்வதேச வர்த்தக கேந்திரமான இலண்டனில் கலகம் தீவிரமாக நடந்ததால், அதனை ஒடுக்குவதற்கு 16,000 போலீசார் இறக்கிவிடப்பட்டனர். அந்நகரில் மட்டும் கலகத்தில் இறங்கிய குற்றத்திற்காக 1,200 - க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்

இலண்டன் மாநகரப் போலீசாரால் அநியாயமாகச்  ட்டுக் கொல்லப்பட்ட கருப்பின இளைஞர் மார்க் டக்கன்.





படிப்பகம்

www.padippakam.com

யப்பட்டனர். குப்பைத் தொட்டியைத் திருடிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட 11 வயது சிறுவனும் இவர்களுள் ஒருவன். இங்கிலாந்து நீதித்துறையும் போலீசுக்கு இணையாகப் பணக்கார வர்க்கத்தின் கையாளாகச் செயல்பட்டது. -று ரூபாய் கூடப் பெறாத ''மினரல் வாட்டர்'' பெட்டியொன்றைத் திருடிய குற்றத்திற்காக, 23 வயதான நிக்கோலஸ் ராபின்சனுக்கு ஆறு மாத சிறை தண்டனையை விதிக்குமளவு நீதித்துறை பயங்கரவாதம் தாண்டவமாடியது.



ஆடம்பர நுகர்பொருள் விற்கும் கடையினை அடித்து நொறுக்கும் இளைஞர்: புதுப்பணக்கார கும்பலின் பகட்டு வாழ்க்கைக்கு எதிரான வர்க்க கோபம்!

• • •

கடந்த ஆகஸ்ட் 4 அன்று இரவில் இலண்டன் நகரின் டாட்டன்ஹாம் பகுதியைச் சேர்ந்த மார்க் டக்கன் என்ற 29 வயதான கருப்பின இளைஞர், இலண்டன் மாநகரப் போலீசாரால் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். மார்க் டக்கன் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றி போலீசார் விளக்கம் அளிக்க வேண்டும் எனக் கோரி, டக்கனின் உறவினர்கள் போலீசு நிலையம் முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அந்த ஆர்ப்பாட்டம் ஏறத்தாழ நான்கு மணி நேரம் நடந்ததெனினும், ஒரு கீழ்நிலை போலீசுக்காரன்கூட டக்கனின் உறவினர்களைச் சந்தித்து விளக்கம் அளிக்க முன்வரவில்லை. போலீசு நடத்திய இப்படுகொலையும், டக்கனின் உறவினர்களை அலட்சியப்படுத்திய போலீசாரின் திமிரும் தான் இக்கலகத்தைத் தொடங்கி வைத்த சிறுபொறியாக அமைந்தன.

டக்கனின் உறவினர்களை போலீசார் அலட்சியப்படுத்தாமல் இருந்திருந்தால் இக்கலகம் நடந்திருக்காது என சில அதிபுத்திசாலிகள் கூறிவருகின்றனர். இந்த விளக்கத்தை ''ஒருவேளை'' என்ற நிபந்தனையோடு மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியும். எனினும், அமைதியான முறையில் கோரிக்கை வைத்தவர்களிடம் போலீசார் விளக்கம் அளிக்க ஏன் முன்வரவில்லை என்ற கேள்வியை எழுப்பினால், இக்கலகத்தின் பின்னணியைப் புரிந்து கொள்ள முடியும்.

நகர்ப்புறக் குற்றங்களைத் தடுப்பதற்காக இங்கிலாந்து போலீசாருக்கு, யாரையும் தடுத்து நிறுத்திச் சோதனையிடும் (Stop and Search) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இலண்டன் மாநகர போலீசார் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திப் புறநகர்ப் பகுதிகளில் வசித்து வரும் கருப்பின இளைஞர்களுக்கு எதிராக நடத்திவரும் அத்துமீறல்கள் ஏராளம். நகர்ப்புறச் சேரிகளில் வசித்து வரும் இளைஞர்கள், கும்பல் கும்பலாகச் சேர்ந்துகொண்டு அடிதடிகளில் இறங்குவதையும், சிறு சிறு குற்றச் செயல்களில் ஈடுபடுவதையும் காட்டித் தனது அத்துமீறல்களை நியாயப்படுத்தி வருகிறது, இங்கிலாந்து போலீசு.

கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகள் தட்டிப் பறிக்கப்பட்டதால், நிர்க்கதிக்குத் தள்ளப்பட்ட இளைஞர்களுக்கும், இலண்டன் போலீ க்கும் இடையே கலகத்தின் பொழுது நடந்த தெருச்சண்டை.



1970-களில் இறுதியில் இங்கிலாந்தின் பிரதமராகப் பதவிக்கு வந்த மார்க்கரெட் தாட்சர், தனியார்மய - தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மீண்டும் உயிர் கொடுத்துத் தீவிரமாக அமல்படுத்தத் தொடங்கினார். இதன் காரணமாக பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்ததோடு, வேறு வேலை தேடவும் வழியற்றவர்களாக, முதலாளித்துவ சமூகத்திற்குத் தேவையற்றவர்களாக ஒதுக்கித் தள்ளப்பட்டனர். அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த இங்கிலாந்தின் தொழி



படிப்பகம்

www.padippakam.com

லாளர் கட்சியோ, அரசனை விஞ்சிய விசுவாசியாக, இத்தாராளமயக் கொள்கைகளை முன்னைக் காட்டிலும் தீவிரமாக அமல்படுத்தியது. ஒருபுறம் வேலையிழப்பு, வேலையில்லாத் திண்டாட்டம்; மறுபுறம், சமூக நலத் திட்டங்களுக்கு வேட்டு என்ற இரட்டை நுகத்தடி அடித்தட்டு மக்களின் மீது சுமத்தப்பட்டது.

குறிப்பாக, பள்ளிப் படிப்பு முடிந்த பின், இரண்டு ஆண்டுகள் படிக்க வேண்டிய மேநிலைப் பள்ளிப் படிப்புக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் நிறுத்தப்பட்டது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளிப்பதற்காக ஒதுக்கப்பட்டு வந்த மானியமும் வெட்டப்பட்டது. இதனின் தொடர்ச்சியாக, ஓரிரு மாதங்களுக்கு முன்பு கல்லூரி படிப்புக்கான கட்டணம் மூன்று மடங்காக உயர்த்தப்பட்டது. அரசு செலவுகளைக் குறைப்பது என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட இம்மானிய வெட்டுகள், அடித்தட்டு குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களைத் தற்குறிகளாக, வேலை வாய்ப்பற்ற விட்டேத்திகளாக மாற்றியது.




கல்விக் கட்டணம் மூன்று மடங்காக உயர்த்தப்பட்டதை எதிர்த்து, பல்கலைக் கழக மாணவர்கள் இலண்டன் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

இங்கிலாந்தில் 1984 - க்கும் 2007 - க்கும் இடைப்பட்ட 13 ஆண்டுகளில், 16 முதல் 24 வயது வரையுள்ள இளைஞர்களுக்குக் கிடைத்துவந்த வேலைவாய்ப்புகளில் 40 சதவீத வேலைகள் ஒழித்துக் கட்டப்பட்டன. அந்நாட்டில் தற்பொழுது 18 சதவீத இளைஞர்கள் பள்ளிக்கோ, வேலைக்கோ செல்ல வழியற்றவர்களாக ஆக்கப்பட்டு, சமூகத்தின் கடைகோடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக, நகர்ப்புறத்தில் வசிக்கும் அடித்தட்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 வயது சிறுவன் கூட ஏதாவதொரு கும்பலில் சேர்ந்து ஊரைச் சுற்றுவது சர்வசாதாரணமாகிவிட்டது. அந்நாட்டில் கும்பல் நடவடிக்கைகள் (gang activity) வேரூன்றியதன் பின்னணி இதுதான்.

போலீசின் அத்துமீறல்களுக்கு எதிராகவும், தம்மை வஞ்சித்துவிட்ட சமூகத்திற்கு எதிராகவும் நகர்ப்புற ஏழை இளைஞர்கள் மத்தியில் கனன்று கொண்டிருந்த கோபம் தான், டக்கனின் கொலையையடுத்துக் கலகமாக மாறியது. இக்கலகத்தில் கருப்பின இளைஞர்கள் மட்டுமின்றி, நடுத்தர வெள்ளையின இளைஞர்கள், வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகள், பள்ளி - கல்லூரி மாணவர்கள் மற்றும் குறைவான சம்பளத்திற்கு வேலை பார்த்துவரும் ஊழியர்கள் எனப் பலத் தரப்பட்டவரும் கலந்து கொண்டதால், இதனை இன மோதலாகச் சித்திரிக்க முடியாமல் போனது. எனினும், சங்கிலித் தொடர் கடைகள் சூறையாடப்பட்டதை மட்டும் பெரிதுபடுத்தி, இக்கலகத்தைச் சமூக விரோத கிரிமினல் நடவடிக்கையாக முத்திரை குத்தியது, இங்கிலாந்தின் ஆளும் கும்பல்.

பொதுமக்களின் சாலை மறியல் போராட்டங்களைக் கூடத் தனக்கு ஏற்படும் இடையூறாகக் கருதும் குறுகிய புத்திகொண்ட நடுத்தர வர்க்கத்திற்கு, கடைகளைச் சூறையாடுவது அரசியல் நடவடிக்கையாக, ஏழைகளின் வர்க்க கோபமாகத் தெரியப் போவதில்லை. இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே பிரிட்டிஷ் வானொலிக்கு பேட்டியளித்த இரண்டு கலகக்காரர்கள், ''நாங்கள் எதை விரும்புகிறோமோ, அதை எங்களால் செய்ய முடியும் எனப் பணக்காரக் கும்பலுக்குக் காட்டுவதுதான் இந்தக் கலகம்'' எனத் தெளிவுபடுத்தினார்கள். ''இக்கலகம் சமூக எதிர்வினை என்றால், குக்கி ஜீன்ஸ் பேண்ட் எங்களுக்கும் தேவை என்பதற்கான சமூக எதிர்வினை தான் இது''எனப் புரிய வைத்தார், கருப்பின இளைஞர் ஒருவர்.

''கலகம் நடந்த இடங்களிலெல்லாம் போலீசாரோடு மோதுவதுதான் இளைஞர்களின் முதல் நோக்கமாக இருந்தது. கடைகளில் புகுந்து சூறையாடுவதெல்லாம் அவர்களுக்கு இரண்டாம்பட்சமானதுதான். இக்கலகத்தின் பொழுது நடந்த மோதல் - எதிர்மோதல் என்ற அடிப்படையில்தான் தனிநபர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களையும், பிர்மிங்ஹாமில் மூன்று முசுலீம் இளைஞர்கள் கொல்லப்பட்டதையும் பார்க்க முடியுமே தவிர, இச்சம்பவங்களைத் தனியாகப் பிரித்தெடுத்து கிரிமினல் நடவடிக்கையாகச் சித்தரிப்பது ஆளும் கும்பலின் வர்க்க வெறுப்புணர்வைத்தான் காட்டுகிறது'' என மைக் மார்குஸீ என்ற பத்திரிகையாளர் குறிப்பிடுகிறார்.

1970 - களில் தாராளமயக் கொள்கைகளைப் புகுத்தி, பேராசையே சிறந்தது எனப் பிரச்சாரம் செய்து, நுகர்வு வெறிக் கலாச்சாரத்தில் சமூகத்தையே மூழ்கடித்த பிரிட்டிஷ் ஆளும் கும்பல், இக்கலகத்தைக் காட்டி இளைஞர்கள் மத்தியில் ஒழுக்கக் கேடு மலிந்துவிட்டதாகக் குற்றஞ்சுமத்துகிறது. வீட்டு மனைக் கடன் சூதாட்டத்தின் மூலம் பொதுமக்களின் சேமிப்புகளையெல்லாம் சுருட்டிக் கொண்ட பிரிட்டிஷ் வங்கிகளுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான அரசு மானியங்களையும் வாரிக் கொடுத்த பிரிட்டிஷ் அரசு, ஜீன்ஸ் பேண்டையும், சாக்லெட்டையும் எடுத்துச் சென்ற இளைஞர்கள் மீது திருட்டுப் பட்டம் கட்டுகிறது. சாத்தான் வேதம் ஓதுகிறதோ?

● அழகு



படிப்பகம்

www.padippakam.com

## தமிழக பட்ஜெட்:

# வருமானத்திற்கு வரி, சாராயம் கவர்ச்சிக்கு இலவசத் திட்டங்கள்

**வரிச் சுமையோடு, கடன் சுமையையும் ஏற்றித் தமிழக மக்களின் தலையில் கட்டிவிட்டார், 'நிர்வாகப் புலி' ஜெயா.**

ஏழைகளின் கோவணத்தைப் பிடுங்காத குறையாக வரிவிதிப்பைத் தீவிரப்படுத்துவது, தமிழனைப் போதையில் தள்ளி சாராயத்தின் மூலம் கிடைக்கும் கொழுத்த வருவாயிலிருந்து எலும்புத்துண்டு போல கவர்ச்சித் திட்டங்களுக்கு வாரியிறைப்பது என்ற உத்தியுடன் கிளம்பியிருக்கிறது, பாசிச ஜெயா அரசு. தமிழச்சிகளின் தாலியறுத்து இலவச கலர் டிவிக்களை கருணாநிதி கொடுத்தார் என்றால், அதே சாராய உத்தியோடு கலர் டிவிக்களுக்குப் பதிலாக மிக்சி, கிரைண்டரைக் கொடுக்கக் கிளம்பியிருக்கிறார், ஜெயலலிதா. மதுபானங்கள் மூலம் கடந்த ஆண்டில் ரூ. 6,246 கோடி கிடைத்த விற்பனை வரி, இந்த ஆண்டு ரூ. 7,755 கோடியாக அதிகரிக்கும் என்றும், கடந்த ஆண்டைவிட கலால் வரி மூலம் ரூ. 2,076 கோடி கூடுதலாகக் கிடைக்கும் என்றும் ஜெயா அரசின் 2011-12-ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையில்(பட்ஜெட்டில்) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, முந்தைய கருணாநிதி ஆட்சியைப் போலவே தமிழக மக்களைக் குடிபோதையில் ஆழ்த்தி, சாராய விற்பனை மூலம் கூடுதலாகக் கொள்ளையடிக்க ஜெயா அரசு தீர்மானித்துள்ளது.

இலவசத் திட்டங்களை தி.மு.க. அரசு அறிவித்தபோதெல்லாம், மக்களை ஏழைகளாக வைத்திருக்கும் திட்டங்கள் என்று கேலி செய்த ஜெயலலிதா, இப்போது 6-ஆம் வகுப்பு முதலாக மாணவர்களுக்கு பேண்ட் சர்ட், மாணவிகளுக்கு சல்வார் கமீஸ், ஏழைகளுக்கு மிக்சி-கிரைண்டர், மின்விசிறி, மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் - என 8,900 கோடி ரூபாய்க்குப் புதிய திட்டங்களையும் சலுகைகளையும் பட்ஜெட்டில் அறிவித்துள்ளதோடு, வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு ஆடு-மாடுகள் தரப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

போலி கம்யூனிஸ்டுகளால் அன்றாடம் துதிபாடப்படும் ஜெயா, பட்ஜெட்டுக்கு முன்னதாக கடந்த ஜூலை மாதத்தில் அரசு வருவாயைப் பெருக்குவது என்ற பெயரில், இதற்கு முன் 4 சதவீதமாக வசூலிக்கப்பட்டு வந்த மதிப்புக் கூட்டு வரியை (வாட் வரியை) 5 சதவீதமாக அவசர அவசரமாக உயர்த்தினார். இக்கூடுதல் வரி விதிப்பால் சமையல் எண்ணெய் விலை கிலோ ரூ.2 முதல் 3 வரையிலும், சிகரெட் விலை பாக்கெட்டுக்கு ரூ.5 வரையிலும் அதிகரித்துள்ளதோடு, வீட்டு உபயோகப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலைகளும் கிடுகிடுவென அதிகரித்துள்ளன. இக்கூடுதல் வரி விதிப்பால் மொத்தமாக அரசுக்கு ரூ.5200 கோடி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இப்படி, பட்ஜெட்டுக்கு முன்னதாக வரிகளைப் போட்டுவிட்டு, இப்போது வரிகளே இல்லாத பட்ஜெட் என்று மாய்மாலம் செய்தும், இலவசக் கவர்ச்சித் திட்டங்களின் ஒளிவெள்ளத்தில் வரிக் கொள்ளையை மூடிமறைக்கவும் பாசிச ஜெயா கும்பல் எத்தணிக்கிறது.

வழக்கம் போலவே, ''கருணாநிதி கஜானாவைக் காலியாக்கி ஒரு லட்சத்து ஓராயிரம் கோடி கடன் வைத்துவிட்டுப் போயுள்ளார்; அதைக் குறைக்கப் போகிறோம்'' என்று சவடால் அடித்தார் ஜெயலலிதா. ஆனால், நிர்வாக சூரப்புலியாகப் பார்ப்பன ஊடகங்களால் சித்தரிக்கப்படும் ஜெயா, எந்த அளவுக்குக் குறைத்திருக்கிறார் என்று பார்த்தால், 31.3.2012-இல் 1,18,801 கோடி ரூபாயாக மாநில அரசின் கடன் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, நடப்பு நிதியாண்டின் கடன் மதிப்பு

கருணாநிதி அரசின் இலவசத் திட்டங்களைச் சாடிய 'அம்மா'வின் படத்தைப் பெட்டியில் ஒட்டிக் கொண்டு, 'அம்மா'வுடன் இலவச கவர்ச்சி பட்ஜெட்டை சமர்ப்பிக்க வரும் நிதியமைச்சர் ஓ.பன்னீர் செல்வம்.





படிப்பகம்

www.padippakam.com

ரூ.17 ஆயிரம் கோடிக்கு அதிகரித்துள்ளது. பட்ஜெட் கூட்டத்தொடரில், ஜெயலலிதாவின் நிர்வாகத் திறமையால் தமிழகத்தில் நீடித்து வரும் மின்வெட்டு 2012-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குள் முழுவதுமாக நீக்கப்பட்டுவிடும் என்று ஆரவாரத்துடன் அறிவிக்கிறார், அமைச்சர் நத்தம் விசுவநாதன். முந்தைய தி.மு.க. அரசின் மின்திட்டங்கள் நிறைவேறுவதால்தான் மின்தடை முற்றாக நீங்குகிறதே தவிர, இது ஜெயலலிதாவின் மூன்று மாத கால நிர்வாக சூரத்தனத்தால் விளைந்த சாதனை அல்ல.



தமிழச்சிகளின் தாலியை அறுக்கும் சாராயத்தின் மூலம் கிடைக்கும் வருவாயில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் ஜெயா.

''விலைவாசி உயர்வுக்கு மைய அரசுதான் காரணம்'' என்றும், ''தமிழக மக்களுக்கு நன்மை செய்ய விடாமல் மத்திய அரசு தடையாக இருக்கிறது, மாநில அரசுகளுக்கு அதிகாரமில்லை'' என்றும் ஆவேசமாகக் கூப்பாடு போடும் ஜெயலலிதா, ''மைய அரசிடம் ரூ.2.5 லட்சம் கோடி கோரிய நிதியில் ரூ.10,000 கோடியாவது தமிழகத்துக்குக் கொடுத்திருந்தால், கூடுதலாக வரி போட்டிருக்க மாட்டோம்'' என்று பழியை மைய அரசின் மீது சுமத்துகிறார். ஆனால், திட்டக்குழு விவாதத்தில் கலந்து கொண்டபோது, மாநில அரசு கேட்டதை விட மத்திய அரசு அதிகமாகக் கொடுத்ததாகக் கூறியதும் இதே ஜெயாதான். இப்போது, கேட்டாலும் கொடுக்காதது மத்திய அரசு என்று சொல்பவரும் இவரேதான். பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை மைய அரசு அநியாயமாக உயர்த்தியபோது, மாநில அரசின் சார்பில் எரிவாயு சிலிண்டருக்கு மானியம் அளிப்பதாகப் பம்மாத்து செய்த ஜெயா, அக் கூடுதல் செலவை வாட் வரி விதிப்பின் மூலமும் ரேஷன் அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விலையை ரூ.3 அளவுக்குக் கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாக உயர்த்தியும் மீண்டும் பறித்துக் கொண்டுவிட்டார்.

முந்தைய கருணாநிதி அரசு ''செம்மை நெல் சாகுபடி'', ''ராஜராஜன்-1000'' என்றெல்லாம் பெயர் சூட்டிய ஒற்றை நாற்று நடவு என்று விவசாயிகளால் குறிப்பிடப்படுவதையே பெயர் மாற்றி ''திருந்திய நெல் சாகுபடி'' என்று அறிவித்துள்ள ஜெயா அரசு, திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தைப் பரவலாக்கப் போவதாக பட்ஜெட்டில் அறிவித்துள்ளது. இது தவிர, நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டம், துல்லிய பண்ணையம், பி.டி. பருத்தியைப் பரவலாக்குதல், பயறு வகைகள் - எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைபிடித்தல், பசுமைக் குடில், துல்லிய பண்ணைய முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல், தோட்டக்கலைப் பயிர்களுக்கான அடர் நடவு முறை போன்றவை தீவிரமாகப் பரவலாக்குவது என்று அடுக்கடுக்கான திட்டங்கள் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. பருத்தியைப் பரவலாக்கக் கூடாது என சில சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியதும், பி.டி. பருத்தியைப் பரவலாக்கும் எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளாது என்று ஜெயா அறிவித்தார். ஆனால் தமிழக விவசாயிகள் பெரிதும் சார்ந்துள்ள தனியார் விதைக் கம்பெனிகள், பி.டி. பருத்தி விதைகளை விற்பதைத் தடுக்க அவரிடமிருந்து எந்த அறிவிப்பும் இல்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிற்சாலைப் பயன்பாட்டுக்காக அரசின் வசமுள்ள நிலங்களை ஒருங்கிணைத்தும், நில உரிமையாளர்களைப் பாதிக்காதவண்ணம் தனியார் நிலத்தைக் கையகப்படுத்தியும் நில வங்கி ஏற்படுத்தப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. கருணாநிதி அரசு சிப்காட் மூலமாக செய்து வந்த நிலப்பறிப்பு வேலையை, இப்போது ஜெயா அரசு நிலவங்கியின் மூலமாகச் செய்யப்போகிறது. பலியாட்டுக்கு மாலை போட்டுக் கொண்டு வருவதைப் போல, விவசாயிகளிடமிருந்து நிலங்களைப் பறித்து, விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றி நாடோடிகளாக்கும் இச்சதியை மூடிமறைத்துக் கொண்டு, விவசாய வளர்ச்சித் திட்டங்களை ஆரவாரமாக ஜெயா அரசு அறிவித்துள்ளது.

நேற்றுவரை ஜெயா ஆதரவு பார்ப்பன ஊடகங்கள், இலவசங்களே கூடாது, அதனால் மக்கள் சோம்பேறிகளாக்கப்படுகிறார்கள் என்று கூப்பாடு போட்டன. இப்போது ஜெயலலிதா அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இலவசத் திட்டங்களை ''ஆக்கபூர்வமான திட்டங்கள்'', ''வளர்ச்சிக்கு வித்திடும் திட்டங்கள்'', ''கிராமப்புறத்துக்கு முன்னுரிமை தரும் திட்டங்கள்'' என்றும் ஏற்றிப் போற்றி துதிபாடிக் கொண்டிருக்கின்றன. நிலத்தைப் பறிகொடுத்துவிட்டு ஜெயா அரசின் ஆரவார விவசாயத் திட்டங்களால் எந்த விவசாயி முன்னேற முடியும் என்பது இந்தக் கோயபல்சுகளுக்கே வெளிச்சம்.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

# 'புரட்சித் தலைவி'யின் புரட்டுத் திட்டம்!

**இலவச ஆடு-மாடு வரும் முன்னே, கடன் வரும் பின்னே என்பதாக இக்கவர்ச்சித் திட்டம் முடிந்து போகலாம்.**

கிராமப்புறங்களில் வசிக்கும் கூலி - ஏழை விவசாயிகளுக்கு இலவச ஆடு-மாடு வழங்கும் திட்டத்தைத் 'தாயுள்ளம் கொண்ட அம்மா' அரசு அறிவித்துள்ளது. அண்ணா பிறந்த நாளான செப். 15 அன்று முதற்கட்டமாக 1,600 கலப்பின ஜெர்சி கறவை மாடுகளையும் அதே எண்ணிக்கையிலான ஆடுகளையும் வழங்கப் போவதாகவும், இத்திட்டத்தின் 30 சதப் பயனாளிகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினராக இருப்பர் என்றும் ஜெயா அரசு அறிவித்துள்ளது. 1,157 கோடி ரூபாய் செலவில் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்குள் இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும் என்றும், நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்காக 191 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சியைக் கொண்டுவரும் திட்டம் என்றும், விவசாயத்துக்கும் விவசாயிகளுக்கும் முன்னுரிமை தரும் திட்டம் என்றும் இதனைப் பார்ப்பன ஊடகங்கள் உச்சி முகர்ந்து பாராட்டுகின்றன.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள், இலவச ஆடு வழங்கும் திட்டத்தின்படி 7 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுக்கு நாலு ஆடுகள் வீதம் மொத்தம் 28 இலட்சம் ஆடுகளும்; இலவச மாடு வழங்கும் திட்டத்தின்படி 60,000 குடும்பங்களுக்கு வீட்டிற்கு ஒரு கறவை மாடு என்ற வீதம் 60,000 கறவை மாடுகளும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடு வழங்கும் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளி கிராமப்புறத்தில் வசிக்கும் நிலமற்ற கூலி விவசாயியாக இருக்க வேண்டும்; அவருக்கு ஆடோ, மாடோ சொந்தமாக இருக்கக் கூடாது; இலவச மாடு வழங்கும் திட்டத்தின் பயனாளியாகவும் இருக்கக் கூடாது; பயனாளியின் மனைவியோ/கணவனோ, மாமியார் - மாமனாரோ, மகனோ - மகளோ, மருமகளோ - மருமகனோ மைய அல்லது மாநில அரசு ஊழியராகவோ, உள்ளூராட்சியிலோ, பொதுத்துறை நிறுவனங்களிலோ, கூட்டுறவு நிறுவனங்களிலோ பணியாற்றுபவராக இருக்கக் கூடாது.

மாடு வழங்கும் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளியோ அல்லது அவரது குடும்பத்தினரோ ஒரு ஏக்கருக்கு மிகாமல் நிலம் வைத்திருக்கும் ஏழை விவசாயியாக இருக்க வேண்டும். பயனாளிக்குப் பசு மாடோ, எருமை மாடோ சொந்தமாக இருக்கக் கூடாது; பயனாளியின் மனைவியோ/கணவனோ, மாமியார் - மாமனாரோ, மகனோ - மகளோ, மருமகளோ - மருமகனோ மைய அல்லது மாநில அரசு ஊழியராகவோ, உள்ளூராட்சியிலோ, பொதுத்துறை நிறுவனங்களிலோ, கூட்டுறவு நிறுவனங்களிலோ பணியாற்றுபவராக இருக்கக் கூடாது.

இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு கிராம கமிட்டிகள் அமைக்கப்படும். கிராம கமிட்டிகளால் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலைக் கால்நடை மருத்துவர், துணை வட்டார வளர்ச்சி அதிகாரி, கிராம நிர்வாக அதிகாரி ஆகிய மூவரைக் கொண்ட கமிட்டி ஆய்வு செய்து இறுதி செய்யும். இறுதிப்பட்டிலுக்குக் கிராம கமிட்டியும், அதன் பின் கிராம சபையும் ஒப்புதல் அளிக்கும்.

ஈரோடு மாவட்டம்- சின்னியம்பாளையத்தைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி பாலை தெருவில் கொட்டி நடத்திய போராட்டம். (கோப்புப்படம்)





படிப்பகம்

www.padippakam.com

**தனியார் நிறுவனங்களும் பெரும் பண்ணையாளர் களுமே பால் உற்பத்தித் தொழிலில் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தி வருவதால், ஓரிரு மாடுகளை வைத்துள்ள சிறுவிவசாயிகள் தீவன விலையேற்றத்தாலும், பால் கொள்முதல் விலை கட்டுபடியாகாததாலும் படிப்படியாக இத்தொழிலிருந்தே வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.**



இப்படி அடுக்கடுக்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் இத்திட்டத்தில் மோசடிகள் நடைபெறுவதைத் தடுக்குமா அல்லது ஊழலுக்கு வழிவகுக்குமா என்பதும், இத்திட்டம் கலைஞரின் இலவச இரண்டு ஏக்கர் நிலத் திட்டம் போல கண்துடைப்பாக முடிந்துவிடுமா என்பதும் போகபோகத் தெரிந்துவிடும்.

• • •

**கா**ல்நடை வளர்ப்பு தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரங்களுள் ஒன்றாகும். கால்நடைச் செல்வங்கள், விவசாயிகளுக்கு நடமாடும் வங்கி; அவர்களது அவசரச் செலவுக்கு எப்பொழுதும் கைகொடுப்பது கால்நடைகள்தான். ஒட்டுமொத்த மாநில உற்பத்தியில் 6 சத பங்களிப்பை கொடுக்கும் கால்நடை வளர்ப்பிற்கு பட்ஜெட்டில் 1 முதல் 2 சதவீத தொகை மட்டுமே ஒதுக்கப்படுகிறது.

தனியார்மய - தாராளமயக் கொள்கை தீவிரமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆவினுக்கு இணையாக தனியார் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் பால் உற்பத்தியில் பங்கேற்பு; இறைச்சி வியாபாரத்தில் பெருந்தொழில் நிறுவனங்கள் ஈடுபடுதல்; கால்நடை மருத்துவம் மற்றும் உற்பத்திப் பெருக்க சேவையில் தனியார்மயம்; ஆவின் பால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட சலுகைகள் மற்றும் மானியங்கள் வெட்டப்படுதல் முதலானவை நடைமுறைக்கு வந்தன. இதனால், ஒரு காலத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு வாராவாரம் பணப் பட்டுவாடா செய்து வந்த ஆவின், இப்பொழுது மாதக் கணக்கில் இழுத்தடிக்கிறது. பாலுக்குக் கிடைக்கும் விலையும் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாவதில்லை.

அதேநேரத்தில் ஹட்சன், ஹெரிடேஜ், ஏபிடி, விஜய், ரிலையன்ஸ், திருமலா போன்ற தனியார் நிறுவனங்கள் கிராமங்களில் பால் சேகரிப்பு நிலையங்களை உருவாக்கி, சிறு விவசாயிகளிடம் பாலைக் கொள்முதல் செய்து வருவதோடு, பெரும் பண்ணைகளையும் உருவாக்கி வருகின்றன. உதாரணமாக, ஏபிடி நிறுவனத்தின் மேற்பார்வையில் பொள்ளாச்சியில் ஆயிரத்திற்கும் அதிகமான மாடுகளை கொண்ட பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு பக்கம் பெரும் முதலீட்டை கொண்ட புதிய வகையான பெரும் பண்ணை விவசாயிகள் பால் உற்பத்தியில் களம் இறங்கியுள்ளனர். உயர்தர மாடுகள், பல ஏக்கரில் தீவனப்பயிர் விவசாயம், பால் கறவை இயந்திரம், தீவன புல் அறுவடை கருவிகள் போன்ற நவீன இயந்திரங்களுடன் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 100 முதல் 400 லிட்டர்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இப்பண்ணையாளர்களை முகவர்களாகக் கொண்டு கவின் கேர், ஹட்சன் போன்ற தனியார் நிறுவனங்கள் இப்பண்ணையாளர்களிடமிருந்து பாலைக் கொள்முதல் செய்ய ஆரம்பித்துள்ளன.

இத்தனியார் நிறுவனங்களும் பெரும் பண்ணையாளர்களுமே பால் உற்பத்தித் தொழிலில் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தி வருவதால், ஓரிரு மாடுகளை வைத்துள்ள சிறு விவசாயிகள் தீவன விலையேற்றத்தாலும், பால் கொள்முதல் விலை கட்டுபடியாகாததாலும் படிப்படியாக இத்தொழிலிலிருந்தே வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

இன்றைய சூழலில் இரண்டு - மூன்று மாடுகள் வைத்துக் கொண்டு, வரப்புகளில் புல் சேகரித்தும் தீவனம் போட்டும் பராமரித்து பாலை விற்கும் பொழுது அதன் விலை 16-17 ரூபாயை தாண்டவே தடுமாறுகிறது. மேலும் மாட்டுத் தீவன நிறுவனங்கள் தீவனத்தின் விலையைத் தொடர்ந்து உயர்த்திக் கொண்டே போகின்றன. உயர்தர மாடுகளான ஜெர்சி மாடுகளின் தீவனச் செலவு குறைந்தது நாளொன்றுக்கு 50 முதல் 60 ரூபாய் ஆகிறது. ஆடு வளர்ப்பைப் போன்றதல்ல மாடு வளர்ப்பு. மாடுகளுக்கு முறையாகத் தீவனம் கொடுக்க வேண்டும். ஒழுங்காகப் பராமரிக்காவிட்டால் ஒரு ஈத்துதான் ஒழுங்காகப் பால் கறக்கும். அப்புறம் 10 லிட்டர் பால் கொடுத்த மாடு 4 லிட்டர்தான் தரும்.

இதேநிலைமைதான் ஆடு வளர்ப்புத் தொழிலிலும் நிலவுகிறது. சங்கிலித்தொடர் கறிக்கடைகளைத் திறந்து வரும் ரிலையன்ஸ் டிலைட், கென்டுகி, சுகுணா டெய்லி பிரஷ் முதலான நிறுவனங்கள், ஒப்பந்த முறையிலான ஆடு வளர்ப்பில் விவசாயிகளை ஈடுபடுத்தி வருவதோடு, பெரும் பண்ணைகளையும் உருவாக்கி வருகின்றன. உதா



படிப்பகம்

www.padippakam.com



**‘‘இலவச ஆட்டினைப் பெற்று வளர்க்கும் கூலி ஏழை விவசாயிக்கு, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் இருந்து ஆடுகளைவளர்ப்பதற்கான செலவையும்மேய்ப்பதற்கான கூலியையும்கழித்துவிட்டால், வெறும்கைதான் மிஞ் ம்.’’**

ரணமாக, அஷ்யூர் அக்ரோ டெக் என்ற நிறுவனம் 1500 ஆடுகளை கொண்ட பண்ணையை சேலம் மாவட்டத்தில் உருவாக்கியுள்ளது. இந்நிறுவனம் ரெட் பிரெஷ் என்ற சங்கிலித் தொடர் கறிக்கடையும் நடத்தி வருகிறது. மெட்ரோ என்ற பன்னாட்டு சில்லறை வர்த்தக நிறுவனம், கொள்முதல் ஒப்பந்தகாரர்களை அமர்த்தி அவர்கள் மூலம் விவசாயிகளிடம் ஒப்பந்தம் போட்டு இறைச்சிக்கான ஆடுகளைக் கொள்முதல் செய்கிறது. தனியார் நிறுவனங்கள் கறி வியாபாரத்தில் பங்கேற்க மத்திய அரசு ஏராளமான சலுகைகளை வழங்கியுள்ளதன் விளைவாக, இத்தனியார் நிறுவனங்கள் 2007-ஆம் ஆண்டில் மட்டும் கோழி மற்றும் இறைச்சி உற்பத்தியில் ஏறத்தாழ 1000 கோடி ரூபாய் முதலீடு செய்து கொழுத்த ஆதாயமடைந்துள்ளன.

கடந்த 20 ஆண்டுகளாக தரிசு மற்றும் மேய்ச்சல் நிலங்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் அரசு தாரை வார்த்து வருவதால், மேய்ச்சல் நிலப்பரப்பு சுருங்கி ஆடு-மாடு மேய்ப்பதற்கான வாய்ப்புகள் அருகி விட்டன. மேலும், ஒரு விவசாயி தனது நிலத்தில் பயிர் உற்பத்தியில் வரும் கழிவுகளை கொண்டு ஆடு-மாடு வளர்ப்பது ; ஆடு-மாடுகளின் கழிவுகளைக் கொண்டு நிலத்தை உரமூட்டுவது ; மாடுகளைப் பயன்படுத்தி நிலத்தைச் செம்மைப்படுத்துவது என்ற பயிர் உற்பத்திக்கும் - கால்நடை வளர்ப்புக்கும் இடையிலான உறவுகள் தனியார்மய - தாராளமயத்தால் அறுக்கப்பட்டு வருகிறது. கோடிக்கணக்கில் முதலீடு, அதீத உரம்- பூச்சிமருந்துகள், நவீன எந்திரங்கள் என ஐரோப்பிய பாணியிலான பெரும் பண்ணைகளே அரசின் ஆதரவோடு பெருகி வருகின்றன. இவற்றின் விளைவாக, ஆடு வளர்ப்புத் தொழிலில் சிறு உடமையாளர்கள் நீடிப்பதற்கான வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் தங்களது கால்நடைகளை வேண்டாத சுமையாகக் கருதி விற்றுத் தொலைத்துவிட்டு, நகரங்களில் கூலித் தொழிலாளிகளாகக் குவியும் போக்கு அதிகரித்து வருகிறது.

ஜெயா அரசு கொடுக்கும் இலவச ஆடு, மாடுகளைப் பெறும் கூலி, ஏழை விவசாயிகள் அனைவரும் அவற்றை வளர்த்து ஆளாக்கி, அம்பானி ரேஞ்சுக்கு வாழ்க்கையில் உயரப் போகிறார்கள் என்பதைப் போல இத்திட்டங்களின் பின்னே ஒளிவட்டம் போடப்படுகிறது. ஆடுகளைப் பெறும் ஏழையிலும் ஏழையான கூலி விவசாயிகள், அந்த நான்கு ஆடுகளையும் முதல் ஒன்றரை ஆண்டுகளுக்குத் தங்கள் கைக்காசைப் போட்டுத்தான் பராமரிக்க வேண்டும். அந்த ஆடுகள் நோய் நொடியில் விழாதபட்சத்தில் ஒன்றரை ஆண்டுகள் கழித்து முதல் குட்டி போடும். ஆரோக்கியமாக இருக்கும் ஆடு ஆறு ஆண்டு வரை இனப்பெருக்க உற்பத்தியில் இருக்கும்.

ஆறு ஆண்டுகளில் போடப்படும் குட்டிகளும் முதிர்ந்த ஆடுகளும் சந்தையில் நல்ல விலைக்குப் போனால், இலவச ஆடு வளர்க்கும் கூலி விவசாயிக்கு சராசரியாக மாத வருமானம் ரூ.1,700/- கிடைக்கக்கூடும். எனினும், ஆடு வளர்ப்புக்கான செலவையும் மேய்ப்பதற்கான கூலியையும் இதிலிருந்து கழித்துவிட்டால், வெறும் கைதான் மிஞ்சும்; சந்தையில் குட்டி ஆட்டின் விலை சரிந்து விழுந்துவிட்டால், அல்லது ஆடுகள் நோய்நொடியெனப் படுத்து பொசுக்கெனப் போய்விட்டால், ஆட்டை வளர்க்கச் செலவிடப்பட்ட கைக்காம் விவசாயியின் உழைப்பும் பைசாவுக்குப் புண்ணியமில்லாமல் வீணாகிப் போகும். இப்படிக் கைக்காசையும் போட்டு, உழைப்பையும் செலுத்த வேண்டிய இத்திட்டத்தில் மாட்டிக் கொள்வதைவிட, கூலி விவசாயிகளுக்கு -று நாள் வேலைவாய்ப்புத் திட்டம் இலாபகரமானதல்லவா?

விதர்பா பகுதியில் விவசாய நெருக்கடியைத் தீர்க்க மகாராஷ்டிர மாநில அரசு உயர்தர மாடுகளை மானிய விலையில் விவசாயிகளுக்குக் கொடுத்தது. இம்மாடுகளைப் பெற்ற விவசாயிகள் தீனி போட்டே மேலும் கடனாளியானார்கள் என்று கூறுகிறார், பத்திரிக்கையாளர் சாய்நாத். தற்போது ஜெயா அரசால் வழங்கப்படும் இலவச ஜெர்சி கறவை மாடுகளுக்குக் கூடுதல் தீவனச் செலவு ஏற்படும் என்பதால், வறுமையிலுள்ள ஏழை விவசாயிகள் அம்மாட்டை வைத்துப் பராமரிக்க முடியாமல் கடனாளியாகக்கூடும். இந்நிலையில், தனியார் ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தை ஒழித்து, தீவனச் செலவுக்கு மானியம் கொடுத்து, கட்டுபடியாகும் விலையில் பாலைக் கொள்முதல் செய்ய முன்வராமல் விவசாயிகளுக்கு மாடு கொடுப்பதும் யானையைக் கொடுப்பதும் ஒன்றுதான்.

● சுடர்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி




வர்கள் - பெற்றோர்களின் போராட்டங்கள் தொடர்ந்தன. 27.7.2011 அன்று சிதம்பரத்தில் நந்தனார் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களைத் திரட்டி ம.உ.பா. மையம் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. 29.7.2011 அன்று உசிலம்பட்டியில் ம.உ.பா.மையமும், மாணவர் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் இணைந்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டத்தை நடத்தின. இப்போராட்டத்தில் ஈடுபட்ட 34 பேரை ஜெயா அரசு கைது செய்து சிறையிலடைத்தது. அரசியல் கைதிகளாகிய எங்களை மொத்தமாக தனி அறையில் அடைக்க வேண்டும், சட்டப்படி அரசியல் கைதிகளுக்கான உரிமைகள் - வசதிகள் அனைத்தும் தரப்பட வேண்டுமெனக் கோரி சிறையிலும் தோழர்கள் தர்ணா போராட்டத்தை நடத்தினர். 1.8.2011 அன்று பாகலூர் அரசு மேல்நிலைப் பள்ளி முன்பாக மாணவர்கள் பெற்றோரைத் திரட்டி பு.ஜ.தெ.ாமு. ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. 5.8.2011 அன்று விருத்தாசலத்தில் மாணவர் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கத்தின் சார்பில் ஊர்வலமும் மாவட்ட கல்வி அதிகாரி அலுவலத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்தி 100-க்கும் மேற்பட்டோர் கைதாகினர். சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்தக் கோரியும் பாசிச ஜெயாவின் ஆணவத்தை எதிர்த்தும் 5.8.2011 அன்று தஞ்சையில் பு.மா.இ.மு. தலைமையில் மன்னர் சரபோஜி அரசு கலைக் கல்லூரியில் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் பு.மா.இ.மு. வினர் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது போலீசும் கல்லூரி நிர்வாகமும் அதைத் தடுக்கும் முயற்சியில் இறங்கின. இதற்கு மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமையிலுள்ள இந்திய மாணவர் சங்கத்தினர் (எஸ்.எப்.ஐ.) ஐந்தாம்படையாகச் செயல்பட்ட னர். அந்தப் பெயர்ப்பலகை அமைப்பின் மாநிலத் துணைத்தலைவர் கரிகாலன், ஆயிரத்துக்கும் மேலாகத் திரண்டிருந்த மாணவர்களிடம் ''கல்லூரிக்குள் செல்லுங்கள், இவர்கள் தலைமையில் போராட்டம் நடத்தினால் பிரச்சினை வரும்'' என்று பீதியூட்டி போராட்டத்தைச் சிதைக்கும் கருங்காலித்தனத்தில் இறங்கினார். இத்துரோகத்தனத்தைப் புரிந்து கொண்ட மாணவர்கள், கரிகாலன் வகையறாக்களை எள்ளிநகையாடிவிட்டு விண்ணதிரும் முழக்கங்களுடன் பு.மா.இ.மு. தலைமையில் போராட்டத்தை நடத்தினர்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு வெளியானதும் பகல் 12 மணியளவில் பு.ஜ.தொ.மு.; பெ.வி.மு. அமைப்புகள் இணைந்து சேலத்தில் பெரியார் சிலைக்கு மாலையணிவித்து பட்டாசுகள் வெடித்து பறையொலிக்க முழக்கமிட்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி இந்த வெற்றியைக் கொண்டாடியதோடு, நகரின் பல இடங்களில் மாணவர்களைத் திரட்டி பட்டாசுகள் வெடித்து இந்த வெற்றியை இனிப்புகள் வழங்கிக் கொண்டாடி தெருமுனைப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். உச்ச நீதி மன்றத் தீர்ப்பு வெளியானதும், பட்டாசுகளை வெடித்து இனிப்புகளை வழங்கி ''பார்ப்பன ஜெயா கும்பலுக்கு செருப்படி!'' என்ற தலைப்பில் சென்னையில் சுவரொட்டிப் பிரச்சாரத்தை பு.மா.இ.மு.வினர்மேற்கொண்டனர். முதல்வரை இழிவுபடுத்தியும் சாதிவெறியைத் தூண்டியும் சுவரொட்டிகளை ஒட்டியதாகக் குற்றம் சாட்டி பு.மா.இ.மு.வின் இரு முன்னணியாளர்கள் மீது பிணையில் வெளிவர முடியாத வழக்கு தொடுத்து சிறையிலடைத்துள்ளது, ஜெயா அரசின் போலீசு. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதும், திருச்சியில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கி வெற்றியைக் கொண்டாடிய புரட்சிகர அமைப்புகள், உழைக்கும் மக்களின் பேராதரவோடு நடத்தப்பட்ட போராட்டத்தின் வெற்றியைப் பறைசாற்றி 18.8.2011 அன்று மாலை காந்தி மார்க்கெட் - மீனாட்சி திருமண மண்டபத்தில் வெற்றிவிழா கூட்டத்தை நடத்தின. ம.க.இ.க. திருச்சி மாவட்டச் செயலர் தோழர் சீனிவாசன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், திருச்சி மாவட்ட பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் கிளர்ச்சியாளன், சமச்சீர் பாடத்திட்டக் குழு உறுப்பினரான கல்வியாளர் பேரா.கருணாநந்தன், ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு ஆகியோர் இப்போராட்ட வெற்றியைத் தக்கவைக்கவும் அடுத்தகட்ட போராட்டத்துக்கு முன்னேறவும் உழைக்கும் மக்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தை உணர்த்தினர். இறுதியாக, ம.க.இ.க. மையக்கலைக்குழுவினர் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சியும் புரட்சிகர அமைப்புகளின் போராட்டத்தை விளக்கிய ''அம்மாவுக்கு ஆப்பு!''என்ற நாடகமும் பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.




உழைக்கும் மக்களின் போராட்டத்தால், தனது எத்தணிப்புகள் மூன்று மாதத்திலேயே வீழ்த்தப்பட்டுள்ளதைக் கண்டு பார்ப்பன பாசிச கும்பல் குமுறிக் கொண்டிருக்கிறது. அடிபட்ட மிருகம் அமைதியாக இருக்காது. அது மீண்டும் வெறியோடு தாக்குதலைத் தொடுக்கும். அதை எதிர்கொண்டு முறியடிக்கவும், இன்றைய போராட்ட வெற்றியைத் தக்கவைத்துக் கொண்டு நாளைய வெற்றியை அறுவடை செய்யவும் உழைக்கும் மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

-பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்! அனைவரையும் விடுதலை செய்!

## - தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ம.உ.பா.மையம் ஆகிய புரட்சிகர அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்









- தடா எனும் கொடிய சட்டத்தின்கீழ் சித்திரவதை செய்து பெற்ற வாக்குமூலத்தை வைத்து தூக்கு தண்டனையா? 21 ஆண்டுகள் சிறைத் தண்டனை, அதுவும் போதாதென்று மரண தண்டனையா?
- ஈழ, இந்தியத் தமிழர்கள் மீதான வெறுப்பு-வக்கிரம் அடிப்படையிலான தாக்குதலே மூவர் மீதான மரண தண்டனை!
- அமைதிப்படை முதல் முள்ளிவாய்க்கால் வரை பல்லாயிரம் ஈழத்தமிழ் மக்களைப் படுகொலை செய்துள்ள காங்கிரசு பரம்பரையின் போர்க் குற்றவாளிகளுக்கு என்ன தண்டனை?







